# குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்

(மனத் தத்துவ நூல்)

பெ. தூரன்

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை, சென்னை-18
போன்: 88574 த. பெ. 1457

உரிமை பதிவு
அமுதம்—76
முதற் பதிப்பு : டிசம்பர், 1953

விலை ரூ. 1 - 0 - 0

## பொருள் அடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | எனது நோக்கம் | 1 |
| 2. | தந்தை தாய் தந்தது | 6 |
| 3. | வளர விடுக | 16 |
| 4. | பேச்சும் பாட்டும் | 24 |
| 5. | ஓடிவிளையாடு பாப்பா | 30 |
| 6. | எண்ணித்துணியும் பேராற்றல் | 37 |
| 7. | அடிக்கலாமா ? | 45 |
| 8. | பயப்படுத்தலாமா ? | 49 |
| 9. | குழந்தைச் சித்திரம் | 53 |
| 10. | ஒரே குழந்தை | 61 |
| 11. | குழந்தையும் பெற்றோரும் | 65 |
| 12. | அறிவிலே ஆசை | 70 |
| 13. | சூழ்நிலை | 74 |
| 14. | வளர்ச்சி | 78 |

நாஷனல் ஆர்ட் பிரஸ்,
தேனாம்பேட்டை, சென்னை-18

# குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்

## 1. எனது நோக்கம்

*பூங் குழந்தை! அது நமக்கு எத்தனை இன்பங் கொடுக்கிறது! எத்தனை இன்பக் கனவுகளையெல்லாம் காணும்படி செய்கிறது! அதன் உச்சிதனை முகர்ந்தால் உள்ளம் குளிர்கின்றது. அதன் சிரிப்பிலே, உடல் நெளிவிலே, மழலையிலே அமுதூறுகின்றது.*

*இந்தப் பூங்குழந்தை உடலிலும் உள்ளத் திறமைகளிலும் நன்கு வளர்ந்து உலகத்திலே புகழோடு வாழ வேண்டாமா? அதற்கு வேண்டிய முயற்சிகளைப் பெற்றோர்களும், குழந்தையைப் பேணுகின்ற மற்றவர்களும் தளர்வின்றி எடுத்துக்கொள்ள வேண்டாமா ?*

*பெற்றோர்களுக்கு, சிறப்பாகத் தாய்க்குக் குழந்தையை நன்கு வளர்ப்பதற்கு வேண்டிய உணர்ச்சிகள் ஓரளவிற்கு இயல்பாகவே அமைகின்றன. தாய்மையோடு இந்த உணர்ச்சிகளும் மலர்ச்சியடைகின்றன. இருந்தாலும் தனது இயல்பான உணர்ச்சிகளோடு வழுவற்ற கல்வி*

யாலும் கேள்வியாலும் பெறும் அறிவையுங் கொண்டு குழந்தையை வளர்த்தால் மிகவும் சிறப்பாக இருக்குமல்லவா?

குழந்தையின் உடல் நலம் செம்மையாக இருப்பதற்குக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல உண்டு. இயற்கை உபாதைகளைத் தவிர்ப்பதிலும், நல்ல பழக்கங்களை அநுசரிக்கச் செய்வதிலும், ஏற்ற உணவை அளிப்பதிலும் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் பல இருக்கின்றன. இவ்வாறே குழந்தையின் உள்ள வளர்ச்சியிலும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் பல உள்ளன. இவற்றையெல்லாம் அறிந்து கொள்வதால் இயல்பாகவே குழந்தையை வளர்ப்பதற்குள்ள உணர்ச்சி இன்னும் நன்கு விரிவடையும். அதனால் பெற்றோர்கள் குழந்தையை மேலும் சிறந்த முறையில் வளர்க்கலாம்.

சில சமயங்களிலே குழந்தை பிடிவாதம் பண்ணுகிறது; ஓயாது அழுது தரையிலே விழுந்து புரளுகிறது; பொய் சொல்லுகிறது. இப்படி நாம் விரும்பாத ஏதாவதொன்றைச் செய்கிறது. தாய்க்குப் பெரிய சோதனையாக அது முடிகிறது. என்ன செய்வதென்று அவளுக்குப் புரிகிறதில்லை. வீட்டில் அநுபவம் வாய்ந்தவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் குழந்தையைத் திருத்த ஏதாவது உபாயம் கூறுவார்கள். பாட்டியம்மாள் இருந்தால் அவளுடைய யோசனை நிச்சயம் கிடைக்கும். குழந்தையின் உள்ளப் போக்கை ஆராய்ந்தறிந்த மனத் தத்துவர்கள் தங்களுடைய யோசனைகளையும் கூறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் குழந்தையை நல்ல முறையில் வளர்க்க ஆசைப்படும் தாயும் தந்தையும் அறிந்திருக்க வேண்டும்.

"ஈன்று புரந்தருதல் என் தலைக்கடனே" என்று தமிழ்த் தாய் ஒருத்தி தனது தலைமையான கடமையைப் பற்றிக் கூறியிருக்கிறாள். குழந்தையைப் பெறுவது மட்டும்

அவளுடைய கடமையல்லவாம்; அக்குழந்தையை நன்ருக வளர்ப்பதும் அவளுடைய முதற் கடமை என்று அவள் எடுத்துக் காட்டியிருக்கிருள்.

தனது குழந்தை உலகிலே முன்னணியிலே நின்று புகழ்பெற வேண்டும் என்று ஆசைப்படாத தாயோ தந்தையோ சாதாரணமாக இருக்கமாட்டார்கள். குழந்தைக்கு இயல்பா யமைந்துள்ள திறமைகள் மலர்வதில் பெற்ருேர்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதையும், சூழ்நிலை எவ்வளவு தூரம் அதற்குச் சாதகமாக இருக்கும் என்பதையும், பெற்ருேர்களின் வாழ்க்கை முறையும் நடத்தையும் எவ்வளவு தூரம் குழந்தையின் இள உள்ளத்திலே பதிகின்றன என்பதையும் இக்காலத்திலே உளவியல் நூல் தெளிவாக ஆய்ந்து கூறுகின்றது. விஞ்ஞான முறையிலே அநேக ஆயிரம் குழந்தைகளை ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிருர்கள். இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளுவது அவசியம். அப்பொழுதுதான் குழந்தைகளை நன்கு வளர்ப்பதிலே பெரியதோர் வெற்றி காண முடியும்; அப்பொழுதுதான் பெற்ருேர்கள் தங்கள் கடமையைச் சரியானபடி செய்தவர்கள் ஆவார்கள் அவர்களுடைய பிற்கால வாழ்வு இன்பமும் அமைதியும் திருப்தியும் உடையதாக அமையும்.

இக்காலத்தில் மனத் தத்துவர்கள் எத்தனையோ ஆராய்ச்சிகள் செய்து குழந்தையைப் பற்றியும், மனிதனைப் பற்றியும், மன வளர்ச்சியைப் பற்றியும் பல உண்மைகளை அறிந்திருக்கிருர்கள். குழந்தை உள்ளத்தைப் பற்றிய அறிவு விஞ்ஞான முறையிலே நன்கு வளர்ந்திருக்கின்றது மனித உள்ளம் மிக ஆச்சரியமானது. அதிலே வெளிப்படையாக இருந்து வாழ்க்கையிலே சாதாரணமாகத் தொழிற்படும் ஒரு பகுதியும் மறைவாக இருக்கும் ஒரு பகுதியும் இருக்கின்றன. இந்த இரண்டு பகுதிகளும் வேறு

வேருகப் பிரிந்திருப்பவை அல்ல. ஒரே உள்ளத்தின் இரண்டு அம்சங்கள். இருந்தாலும் இந்த மறைந்துள்ள பகுதி மிகவும் பொல்லாததாம். அது வெளி மனத்தைக்கூட ஆட்டி வைத்துவிடுமாம். அதில் எத்தனையோ ஆசைகள், விருப்பு வெறுப்பு முதலியவைகள் மறைந்து அழுந்திக் கிடக்கின்றனவாம். அவற்றைப் பற்றியெல்லாம் மனப் பகுப்பியலார் என்ற அறிஞர்கள் ஆராய்ந்து கூறியிருக் கிருர்கள். (மனத்தைப் பற்றியும் மறை மனத்தைப் பற்றி யும் **மனமெனும் மாயக் குரங்கு** என்னும் அடுத்து வரும் நூலில் விரிவாக எழுதுவேன்.) மனப் பகுப்பியலார் கண்டறிந்து கூறியவற்ருல் குழந்தை வளர்ப்பு முறையைப் பற்றிய கருத்துக்களில் பல முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டிருக் கின்றன. மனப் பகுப்பு முறையை முதலில் நன்கு உரு வாக்கி நிலைபெறச் செய்தவர் பிராய்டு (Freud) என்ற அறிஞர் ஆவார். அவருக்குப் பின்னல் இன்னும் பல மனப் பகுப்பியலார் இதைப் பல வழிகளில் அபிவிருத்தி செய்திருக்கிருர்கள். அவர்களுடைய ஆராய்ச்சியின் பய ஞகப் பொதுவாக மனத் தத்துவத்தைப் பற்றிய பல கொள்கைகள் மாற்றமடைந்திருப்பதோடு குழந்தை வளர்ப்பைப் பற்றிய எண்ணங்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த உண்மைகளை யெல்லாம் அறிந்துகொள்ள வேண்டியது குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க விரும்பும் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் கூடியவரையில் எளிய முறையில் இவற்றைப் பற்றிய அடிப்படையான சில முக்கியக் கருத்துக்களை விளக்க முயலுவேன். குழந்தை மன மலர்ச்சியைப் பற்றி நான் கவனித்துக் குறித்து வைத்துள்ள சம்பவங்களுடன் பிணைத்துக் கூடியவரை யில் படிப்பதற்குச் சுவையோ டிருக்கும்படியாகவும்

வாழ்க்கையோடு ஒட்டிய முறையிலும் எழுத வேண்டு மென்பது என்னுடைய ஆவல். அதனால் குழந்தையின் உள்ள வளர்ச்சியைப் பற்றி விஞ்ஞான முறையில் விஷயங்களையும் அத்தியாயங்களையும் கோவைப்படுத்த நான் விரும்பவில்லை. முக்கியமாக அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டியவற்றைப் பற்றி மட்டும் எளிய முறையில் விளக்க இங்கு முயலுவேன்.

பிறக்கும்போதே குழந்தை பாரம்பரியமாகச் சில தன்மைகளைக் கொண்டுள்ளது. அவை சூழ்நிலையால் மலர்கின்றன; அல்லது அவற்றிற்கேற்ற வளம் கிடைக்காமற் போனால் மங்கி மறைந்துபோகின்றன. பாரம்பரியமும் சூழ்நிலையும் குழந்தையின் மலர்ச்சியில் முக்கிய ஸ்தானம் பெறுகின்றன. இவை இரண்டுமே குழந்தையை உருவாக்குகின்றன என்றே கூறிவிடலாம். ஆதலால் குழந்தையின் மன இயல்பை அறிந்து கொள்ளுவதற்கு முன்பு பாரம்பரியம் என்றால் என்ன, அது எவ்வாறு அமைகின்றது, அதற்கு யார் யார் பொறுப்பு என்பனவற்றைப் பற்றியெல்லாம் ஓரளவு அறிந்துகொள்ளுவது அவசியம். அதை அடுத்த பாகத்தில் விவரிப்பேன். சூழ்நிலையைப் பற்றிய விவரத்தையும் பின்னால் ஏற்ற இடத்தில் தெளிவுபடுத்துவேன்.

# 2. தந்தை தாய் தந்தது

"யாரப்பா நீ? — நம்ம சின்ன ராமசாமி மகனா?" என்று கேட்கிறாள் பாட்டி.

"ஆமாம், பாட்டி. எப்படிக் கண்டு பிடிச்சாய்? என்னை நீ பார்த்ததே இல்லையே?" என்று பையன் ஆச்சரியத்தோடு கேட்கிறான். அந்த ஊருக்கு அவன் வந்தது இதுதான் முதல் தடவை. அவன் தந்தை அங்கே அடிக்கடி வருவதுண்டு; ஆனால் அவன் வந்ததில்லை.

"இது தெரியாதா? சின்ன ராமசாமியை வார்த்து வைச்சாப்பிடி இருக்கிறதே. அவனை எனக்கு நல்லாத் தெரியுமே. உன்னைப் பார்த்தால் அவனைப் பார்க்கத் தேவையில்லை" என்று கிழவி பதில் சொல்லுகிறாள்.

பெற்றோரின் சாயலைக் கொண்டு குழந்தைகளை இவ்வாறு தெரிந்துகொள்ள முடியும். அவர்களுடைய உடல் தோற்றம் குழந்தைகளுக்குப் பெரும்பாலும் அமைவதை நாம் சாதாரணமாக அறிந்திருக்கிறோம்.

தோற்றத்தில் மட்டுமல்ல; குண விசேஷங்களிலும், மனத் திறமைகளிலும்கூட இந்த ஒற்றுமை காணப்படுகிறது. "நூலைப்போல சேலை, தாயைப்போல பிள்ளை" என்றும், "அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது" என்றும் சாதாரணமாக மக்கள் பேசுகிறார்கள். பெற்றோரின் தன்மை பிள்ளைகளுக்கு அமையும் என்பதைப் பொதுவாக அனைவரும் உணர்ந்திருந்தாலும் அவ்வாறு அமைவதற்குக் காரணம் என்ன, அந்த அமைப்பைப்பற்றி ஏதாவது விதிகளுண்டா, அந்த அமைப்பு மாறுபாடடைய

முடியுமா என்பன போன்ற கேள்விகளுக்குச் சாஸ்திர முறையாக எடுத்துக்கூற அவர்களுக்குத் தெரியாது. பொதுப்படையாகப் பெற்றோர்களின் உடல் தோற்றத்தையும் உள்ளத் தன்மைகளையும் குழந்தைகளிடம் காணலாகும் என்று அனுபவத்தின் மூலம் அறிந்திருக்கிறோம். நமது நூல்களும் ஆங்காங்கு இதனைக் கூறியுள்ளன. மனத்தத்துவர்கள், உயிர்நூல் வல்லுனர்கள் முதலானவர்கள் ஆராய்ச்சி செய்து கண்டுள்ள முறைப்படி அவ்வொற்றுமைகளுக்குள்ள காரணத்தை இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பெற்றோருக்கும் குழந்தைக்கும் தொடர்பை உண்டாக்குவது ஒரே ஒரு சிறிய உயிரணுதான். ஒரு சிறிய அணுப்போன்ற உயிர். அது இத்தனை ஆச்சரியமான காரியத்தைச் செய்துவிடுகிறது!

ஒரே ஒரு உயிரணு என்றுதானே சொன்னேன்? அதுதான் பூரித்த அண்டம் (Fertilised Egg) என்பது. அந்தப் பூரித்த அண்டத்திற்குக் காரணமாக இரண்டு அணுக்கள் இருக்கின்றன. ஒன்று தந்தையிடமிருந்து வருவது; மற்றொன்று தாயினிடத்திலே உண்டாவது. "பனியிலோர் பாதி சிறுதுளி மாது பண்டியில் வந்து புகுந்து" என்று பட்டினத்துப் பிள்ளையார் பாடுகிறார். ஆமாம், தந்தையிடமிருந்து வருகின்ற அணு அத்தனை சிறியது தான். அதற்கு விந்தணு (Sperm Cell) என்று பெயர். புணர்ச்சியின்போது வெளிப்படும் விந்துவிலே லட்சக்கணக்கான விந்தணுக்கள் இருக்கின்றன.




**விந்தணு**
சுமார் 600 மடங்கு பெரிதாக்கியது

விந்தணுவின் உருவத்தைப் படத்தில் பார்த்தீர்களா? அதற்கு ஒரு வால் இருப்பதைக் கவனியுங்கள். அந்த வாலைச்

சுழற்றிச் சுழற்றி அது முன்னேறிச் செல்லுகிறது. புணர்ச்சியில் வெளிப்பட்ட அத்தனை விந்தணுக்களும் முன்னேக்கிப் புறப்படுகின்றன. ஆனால், ஒன்றுதான் அண்டத்தை (Egg) அடைந்து அதற்குள் புகுவதில் வெற்றியடைகிறது. மற்றவையெல்லாம் நசித்துப் போகின்றன.


அண்டம் என்பது தாயின் கருப்பையோடு சம்பந்தப்பட்டுள்ள சூல்பை (Ovary) யில் உண்டாகும் ஒரு சிறு



அண்டம்
சுமார் 200 மடங்கு பெரிதாக்கிக் காண்பிக்கப்பட்டுள்ளது

அணு. இது விந்தணுவைவிட உருவத்திலே சற்றுப் பெரியது. இந்த அண்டத்தை உண்டாக்கும் சூல்பைகள் இரண்டு இருக்கின்றன. புணர்ச்சியின்போது ஒவ்வொரு முறையும் லட்சக்கணக்கான விந்தணுக்கள் வெளிப்படுகின்றன என்று சொன்னேன். ஆனால், அண்டமானது மாதத்திற்கு ஒன்றுதான் உற்பத்தியாகிக் கருப்பையை நோக்கிவரும். இரண்டு சூல் பைகளில் ஒன்றிலிருந்து ஒரு மாதத்திற்கு ஒன்றும், மற்றதிலிருந்து அடுத்த மாதத்திற்கு ஒன்றுமாக மாறிமாறி அண்டம் வெளியாகின்றது.


கருப்பையை நோக்கி வந்து கொண்டிருக்கும் அண்டத்தை விந்தணு சந்தித்தால் அதற்குள் பாய்ந்து அதைக்




ஆண் குறி: விந்தணு வெளியாகும் வகை

1. விந்தணுச் சுரப்பி 2. விந்து நாளம் 3. விந்துப்பை
4. சிறுநீர்ப் பை 5. சிறுநீர்ப் புற வழி—விந்தணுச் சுரப்பியில் உண்டாகி, விந்துப்பையில் சேர்ந்து, சிறுநீர்ப் புற வழியின்மூலம் விந்தணு வெளிப்படுகிறது.

கருவாக மாறச் செய்கிறது. அப்படிச் சந்திக்காவிடில் அவ்வண்டம் பயனற்று அழிந்து விடுகிறது.




**பெண் குறி : அண்டம் தோன்றுதல்**

1. யோனி. 2. கருப்பை. 3. கருமூலக் குழாய். 4. அண்டம். 5. சூல்பை.
கருமூலக் குழாய் வழியாக அண்டம் கருப்பையைச் சேர்கிறது.

அண்டத்திற்குள் பாயும்போது விந்தணுவின் வால் அறுந்துபோகும். தலைமட்டும் உள்ளே செல்லும். இவ்வாறு விந்தணுப் பாய்ந்து கருவாக மாறிய அண்டத்தைத்தான் நான் முன்பு பூரித்த அண்டம் என்று குறிப்பிட்டேன்.

பூரித்த அண்டம் உடனே ஒன்று இரண்டாகவும், இரண்டு நான்காகவும் நான்கு எட்டாகவும் இப்படி இரட்டித்துப் பிரிந்து பெருகி ஒரு பிழம்பாகத் திரண்டு வந்து கருப்பையில் ஏதாவது ஓர் இடத்தில் ஒட்டிக்கொண்டு வளர ஆரம்பிக்கிறது. கருப்பையின் உட்புறச் சுவரில் ஒட்டிக் கொண்டது முதல் அது தாயின் உடம்பிலிருந்தே போஷணையை எடுத்துக்கொண்டு வளர்ந்து ஒன்பது மாதத்தில் அற்புதமான குழந்தையாக உருவெடுக்கிறது.

குழந்தையின் தோற்றத்திற்குக் காரணமான பூரித்த அண்டத்தைப் பற்றியும் அப்பூரித்த அண்டத்திற்குக் காரணமான விந்தணுவைப் பற்றியும் அண்டத்தைப் பற்றியும் சுருக்கமாகக் கூறினேன். (இதைப்பற்றி, **கருவில் வளரும் குழந்தை** என்ற நூலில் விரிவாக விளக்கியிருக்


கிறேன்.) அதிலிருந்து பெற்ருேர்களின் உடற்கட்டோ தன்மைகளோ குழந்தைக்கு உண்டாக வேண்டுமாஞல் தந்தையிடமிருந்து வந்த விந்தணுவும், தாயிடத்துத் தோன்றிய அண்டமுந்தான் காரணமாக இருக்கவேண்டுமென அறிந்து கொள்ளலாம்.

ஆதலால் அவையிரண்டையும் கூர்ந்து சோதனை செய்து பார்த்தால் பாரம்பரியமாக வரும் தன்மைகளின் இரகசியம் வெளிப்பட்டுப் போகும்.

விந்தணுவும் அண்டமும் உருவத்தில் மிகச் சிறியவை என்று கண்டோம். ஆதலால் அவற்றைத் துருவிப் பார்ப்பதற்கு மிகச் சக்திவாய்ந்த பூதக் கண்ணுடிகள் வேண்டும். அதனுல் அத்தகைய பூதக் கண்ணுடிகள் செய்யப்பட்ட பிறகே இவ்வாராய்ச்சியைச் செய்ய முடிந்தது.


விந்தணுவையும், அண்டத்தையும் பூதக் கண்ணுடிமூலம் நோக்கினுல் அவற்றில் தனித்தனி 24 ஜோடிக் கணுக்கோல்கள் (Chromosomes) இருப்பது தெரியவரும். ரப்பரிலே மிக மெல்லியதான நாரிழுத்து அதைச் சிறு சிறு துண்டங்களாகச் செய்தால் எப்படி யிருக்குமோ அவ்வாறு இந்தக் கணுக்கோல்கள் தோன்றுகின்றன. ஒவ்வொரு ஜோடியும் ஒரே மாதிரி உருவமுடையது. ஆனுல், ஜோடிக்கு ஜோடி வேறுபாடு உண்டு. விந்தணுவிலுள்ள ஒரு ஜோடியைப் போலவே உருவமுள்ள ஒரு ஜோடி அண்டத்திலுமிருக்கும். இம்மாதிரி விந்தணுவிலுள்ள 24 ஜோடிகளுக்கும் உருவத்தில் ஒப்பான 24 ஜோடிகள் அண்டத்தில் உண்டு. விந்தணுவிலுள்ள ஒரு ஜோடி மட்டும் உருவத்திலே மாறுபட்டிருக்கும். அந்த மாறுபட்ட ஜோடிதான் குழந்தை ஆணுகப் பிறப்பதற்கும் பெண்ணுகப் பிறப்பதற்கும் காரணமாம். நாம் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சி அதுவல்லவாகையால் அதைப்பற்றி இங்கு விரித்துக் கூருமல் மேலே செல்லுகிறேன்.

விந்தணுவிலும், அண்டத்திலும் 24 ஜோடிக் கணுக்கோல்கள் இருக்கின்றன என்று சொன்னேன். இவை முதிர்ச்சி யடையும்போது இரண்டிரண்டாகப் பிரிந்து ஒவ்வொன்றிலும் 24 கணுக்கோல்கள்தான் இருக்கும். ஆகவே, கருவுண்டாவதற்குக் காரணமான முதிர்ந்த விந்தணுவிலும் அண்டத்திலும் தனித்தனி 24 கணுக்கோல்கள் இருக்கும். அந்த விந்தணு அண்டத்துள் பாய்ந்து அண்டம் பூரிக்கும்போது பழையபடி அதில் 24 ஜோடிகளாய் விடுகின்றன.



**விந்தணு அண்டம் ஒவ்வொன்றிலும் ஒரேமாதிரி உருவமுள்ள 3 கணுக்கோல்கள்.**

இங்குள்ள படத்திலே முதிர்ந்த விந்தணுவிலும் அண்டத்திலும் ஒரேமாதிரி உருவமுள்ள மூன்று கணுக்கோல்கள் காண்பிக்கப்பட்டுள்ளன. தெளிவாகத் தெரியும்பொருட்டு 24-யும் வரையவில்லை. இவ்வாறே மற்றவையும் வேறு வேறு வடிவங்களில் இருக்குமென்று மட்டும் ஊகித்துக்கொள்ள வேண்டும். விந்தணுப் பாய்ந்து அண்டம் பூரிப்பதைக் கீழ்க்கண்ட படம் விளக்குகிறது.




**அண்டத்திற்குள் விந்தணுப் பாய்ந்தபின் 24 ஜோடிக் கணுக்கோல்கள் ஆவதை விளக்கும் படம். தெளிவு பற்றி 3 ஜோடிகள் மட்டும் காண்பிக்கப்பட்டுள்ளன.**

பூரித்த அண்டத்திலுள்ள ஜோடியான மூன்று கணுக்கோல்கள் படத்தில் தெரிகின்றன. இவ்வாறு 24 ஜோடிகள்

இருக்கும். பூரித்த அண்டம் இரண்டிரண்டாகப் பிரிந்து பெருகுமென முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிப் பெருகும்போது ஒவ்வொரு பிரிவிலும் 24 ஜோடிக் கணுக் கோல்கள் இருக்கும்படியாக அவையும் இரட்டித்துப் பெருகும்.

பூரித்த அண்டம் பெருகிக் குழந்தையாக வடிவெடுப்பதை விட்டுவிட்டுக் கணுக்கோல் ஒவ்வொன்றையும் இன்னும் நுட்பமாகத் துருவிப் பார்ப்போம். மிக மிகச் சக்திவாய்ந்த பூதக் கண்ணுடியால் ஆராய்ந்தால் கணுக் கோல்களிலே ஆயிரக்கணக்கான மிக நுட்பமான பாகங்கள் இருப்பதைக் காணலாம். அந்தப் பாகங்களின் திரளே கணுக்கோல். அவைகளுக்கு ஜீனுக்கள் (Genes) என்று பெயர். நமது ஆராய்ச்சி நுட்பமாகப் போய்க் கொண்டேயிருக்கிறதல்லவா? பூரித்த அண்டத்திலே தொடங்கினேம். அதிலிருந்து விந்தணுவிற்கும் அண்டத்திற்கும் வந்து, அவற்றிலிருந்து கணுக்கோல்களுக்கு மாறி, அதிலிருந்து இப்பொழுது ஜீனுக்கு வந்திருக்கிறேம்.

இந்த ஜீனுவிலேதான் ஒவ்வொரு தன்மைக்குமான இரகசியம் ஒளிந்து கொண்டிருக்கிறதாம். ஏதாவது ஒரு தன்மைக்கென ஒரு ஜீனு இருக்கலாம், அல்லது பல ஜீனுக்கள் இருக்கலாம். அவைகள் பல்வேறுவிதமாகக் கூடிப் பிரிந்து குழந்தையின் பாரம்பரியத்தை நிர்ணயம் செய்கின்றன.

குழந்தையாக மாறும் பூரித்த அண்டத்திலுள்ள கணுக்கோல்களில் ஜோடிக்கு ஒன்ருக 24 கணுக்கோல்கள் தந்தையிடத்திலிருந்து வந்ததென்றும், மற்ற 24 தாயிடத்திலிருந்து கிடைத்தவை யென்றும் முன்பே அறிவோம். அந்தப் பூரித்த அண்டம் பிரியும்போது ஏற்படும் உயிரணுக்கள் ஒவ்வொன்றிலும் இதுபோன்ற 24 ஜோடிக் கணுக்கோல்களே இருக்கும். அதாவது ஒவ்வொரு ஜோடி

யிலுமுள்ள ஒரு கணுக்கோல் தந்தை வழியிலும் மற்றொன்று தாய் வழியிலும் வந்ததாகும்.

இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால் தந்தையின் விந்தணுவிலுள்ள 24 ஜோடிக் கணுக்கோல்களில் ஜோடிக்கொன்றாய் 24 அவருடைய தந்தையிடத்திருந்தும்; மற்ற 24 அவருடைய தாயிடத்திருந்தும் வந்தவை என்பது தெளிவாகும். அதேபோல வந்தவையே அண்டத்திலுள்ள கணுக்கோல்களும். இப்படியாக வந்துள்ள 24 ஜோடிக் கணுக்கோல்கள் விந்தணுவோ அல்லது அண்டமோ முதிர்ச்சியடையும்போது ஜோடிக்கொன்றாய்ப் பிரிந்து முதிர்ந்ததில் 24 கணுக்கோல்களே இருக்குமென முன்பு பார்த்தோம். இவ்வாறு பிரிகின்ற அந்த ஜோடிகள் சும்மா பேசாமல் பிரிந்து விடுவதில்லை. தாங்கள் ஒன்றாக இருந்த நட்பின் காரணமாக ஒவ்வொரு ஜோடியும் ஒன்றையொன்று கட்டித் தழுவிக்கொண்டு பிறகு பிரிகின்றன. அப்படித் தழுவும்போது ஒன்றின் மேல் பாகமோ கீழ்ப் பாகமோ அல்லது மத்திய பாகமோ அல்லது வேறு பாகமோ பல சமயங்களில் அறுபட்டு மாறி ஒட்டிக் கொள்ளுகிறது. கணுக்கோல்களின் உருவம் பழையபடியே இருந்தாலும் அவற்றின் ஜீனுக்களில் மாறுதல் ஏற்பட்டு விடுகிறது. இது மிக முக்கியமான விஷயம். இப்படி ஏற்பட்ட மாறுதல்களாலே பாரம்பரியத் தன்மைகள் பலவாறு மாறுபட்டு அமைகின்றன. அவைகளே ஒரே குடும்பத்தில் பிறந்த குழந்தைகளின் உருவ அமைப்பு வேறுபாட்டிற்கும் முக்கியக் காரணமாகின்றன. கணுக்கோல்களின் தழுவலாலே ஜீனுக்கள் எவ்வாறு மாறுபட்டு அமைகின்றன என்பதும், அவை எவ்வாறு குழந்தையின் தன்மையில் வேறுபாடு விளைவிக்கின்றன என்பதும் இன்னும் ஆச்சரியமான விஷயங்கள். அவற்றையும் இங்கே விவரிப்பதென்றால் இப்பகுதி மிகப் பெரிதாகிச் சுவை குன்றிவிடும். ஆகவே, இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். அதற்கு

மேலே சூழ்நிலையின் சக்தியைப் பற்றிப் பெரிய விஷயமும் இருக்கிறது. (இவற்றைப்பற்றி யெல்லாம் விரிவாக அறிந்துகொள்ள வேண்டுமானால், **பாரம்பரியம்** என்ற எனது நூலைப் பார்க்க.)

குழந்தைக்கு அமைந்த உருவத் தோற்றமும் தன்மைகளும் பெரியதோர் அளவிற்குத் தாய் தந்தையர் தந்தவை யென்றும், அவற்றிற்குக் காரணமாக இருந்தவை முக்கியமாகக் கணுக்கோல்களிலுள்ள ஜீனுக்கள் என்றும் இதுவரை கூறியவற்றால் அறிந்துகொள்ள இயலுமானால் அதுவே நான் கொண்ட நோக்கம் நிறைவேறியதற்கு அடையாளமாகும். குழந்தையை நன்கு வளர்ப்பதற்கு இந்த உண்மையும் தெரிந்திருக்க வேண்டும்.

# 3. வளர விடுக

பூங்குழந்தை உலகத்திற்கு வரும்போது தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தியற்றதாக இருக்கிறது. மிருகங்களின் குட்டிகளுக்கு உள்ள ஓரளவு சக்தி கூட இதற்கில்லை. மிருகங்களின் குட்டிகள் பிறந்தவுடன் நடமாடுகின்றன. தாயிடம் பாலருந்தத் தாமே செல்லுகின்றன. ஆனால் மனிதக் குழந்தைக்கு இவை போன்ற திறமைகள் கூட இல்லை.

குழந்தை இவ்வாறு சக்தியற்ற நிலைமையிலிருந்து வளர வேண்டும். சூழ்நிலையை அனுசரித்து வாழக் குழந்தை சிறிது சிறிதாகத்தான் அறிந்து கொள்கின்றது.

கண் பார்வை, காது கேட்டல் முதலிய புலனறிவுகளும், உள்ளமும் பிறந்தது முதல் வேகமாக மலர ஆரம்பிக்கின்றன. உலகத்திலே தோன்றிய குழந்தையின் முதல் வேலை உடலிலும் உள்ளத்திலும் வளர்ச்சியடைவது. ஆதலால் இவ்விரு வகைப்பட்ட வளர்ச்சிக்கும் ஏற்ற வசதிகள் இருக்க வேண்டும்.

உடலும் உள்ளமும் வளர நல்ல சத்துள்ள உணவு, தூய்மையான காற்று, சூரிய ஒளி, தாராளமான நடமாட்டம், விளையாட்டு, போதுமான ஓய்வு, தூக்கம் என்ற இவையெல்லாம் அவசியம். இவற்றோடு மற்றொன்றும் மிக முக்கியமாகத் தேவை. அதுதான் அன்பும் அனுதாபமும் உள்ள அமைதியான சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையில்லாமல் முன்னால் கூறிய மற்றெல்லாம் இருந்தாலும் குழந்தையின் வளர்ச்சி திருப்திகரமாக நடைபெறாது.

உணவின் முக்கியத்தைப் பற்றி இன்று அதிகம் வற்புறுத்திக் கூற வேண்டியதில்லை யென்று நினைக்கிறேன்.

இளமைப் பருவத்தில் எவ்வகையான உணவு கொடுக்கப் படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் அநேகமாகப் பிற்காலத்தில் குழந்தை திடகாத்திரமாகவோ அல்லது பலஹீனமாகவோ ஆகின்றது. ஆதலினாலே இவ்விஷயத்தில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டும் என்பது நன்கு தெரிகிறது. உடல் வளர்ச்சிக்கு வேண்டிய பலவகையான சத்துப் பொருள்களும் கலந்த ஆகாரம் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கவேண்டும். எதிர்கால மனித சமூகத்தின் பெயரால் அதற்கு இந்த உரிமை இருக்கின்றது.

குழந்தைப் பருவத்திலே பால் மிக இன்றியமையாத உணவு. அதைப் போன்று உடல் வளர்ச்சிக்கான பல வகைச் சத்துக்களையும் கொண்ட தனி ஆகாரம் வேறொன்று மில்லை. தாய்ப்பாலில் சத்துப் பொருள்கள் எல்லாம் இருப்பதுடன் குழந்தைக்கு நோய் வராமல் தடுக்கும் சக்தியும் ஓரளவிற்கு இருக்கின்றது. அதனால்தான் குழந்தைக்கு ஆறு மாதமாகும் வரை தாய்ப்பாலுக்குச் சமானமான உணவு வேறில்லை என்று கூறப்படுகிறது. ஆறு மாதத்திற்குமேல் பசும்பாலையும், மற்ற லேசான உணவுகளையும் சிறிது சிறிதாகக் கொடுக்கலாம். ஆனால் ஒன்பது மாதம் வரையிலும் தாய்ப்பால் ஒரு அளவிற்காவது கொடுப்பது அவசியம். அதற்குமேல் வேண்டுவதில்லை.

குழந்தை வளர வளரக் காய் கறிகள் பழங்கள் அதன் உணவில் சேரவேண்டும். ஆரஞ்சு, தக்காளி முதலிய பழங்களில் நல்ல உணவுச் சத்திருக்கின்றது. அம்மாதிரி ஏற்ற உணவுப் பொருள்களை நாம் ஆராய்ந்து குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். ஆரஞ்சு போன்ற பழங்கள் விலை அதிகமாக இருப்பதால் அவற்றிற்குப் பதிலாகத் தக்காளி போன்ற மலிவானவற்றை நாம் தெரிந்து உபயோகிக்கலாம். உடல் அதன் பூரண வளர்ச்சியடையாமற் போவதற்கும், எலும்பு உறுதி பெறுமலிருப்பதற்கும், பற்களின்

வரிசை கெட்டுப் போவதற்கும் உணவிலுள்ள குறைகளே முக்கிய காரணம் என்பதை நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நல்ல உணவைப் போலவே சுத்தமான காற்றும் அவசியம். தாராளமாக ஓடியாடி விளையாடுவதற்குச் சூரிய ஒளி படும் திறந்த வெளியும் வேண்டும். குழந்தையின் வளர்ச்சி சரிவர நடைபெறுவதற்கு நல்ல காற்று வேண்டுமென்பதை முன்பே நாம் அறிந்திருக்கிறோம். சூரிய ஒளியும் அதைப்போலவே அவசியமென்று இப்பொழுது வைத்தியர்கள் கண்டு சொல்லுகிறார்கள். எலும்புகளின் வளர்ச்சிக்குச் சுண்ணும்புச் சத்துக் கலந்த உணவு மட்டும் போதாது. சூரிய ஒளியும் வேண்டுமாம். சூரிய ஒளியானது உணவை உடம்பில் சேர்ப்பதற்கும் உதவி செய்கின்றது.

திறந்த வெளியிலே சூரிய கிரணங்கள் உடம்பிலே படும்படி ஓடியாடித் திரிந்து நல்ல காற்றைச் சுவாசிப்பது போலவே உடல் வளர்ச்சிக்கு ஓய்வும் தூக்கமும் அவசியமாகும். குழந்தை பிறந்த முதல் ஆறேழு வாரங்கள் வரை அதன் வளர்ச்சி மிக வேகமாக நடக்கின்றது. அதனால்தான் குழந்தை அந்தக் காலத்தில் தினமும் இருபது மணி நேரத்திற்குமேல் தூங்கிக் கொண்டிருக்கிறது. பின்பு வரவரத் தூங்கும் நேரம் குறைய ஆரம்பித்து ஆருவது மாதத்தில் சுமார் 16, 17 மணியாக ஏகதேசமாக அமைகின்றது.

மேற்கூறியவற்றை யெல்லாம் நன்கு கவனிக்க மேல் நாடுகளில் பல வசதிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் குழந்தையை அடிக்கடி பரீக்ஷித்துப் பார்க்கவும், அதற்கு அவசியமான உணவு முதலியவற்றைப் பற்றிக் கூறவும் நிபுணர்களை ஆங்காங்கு நியமித்திருக்கிறார்கள். ருஷியா போன்ற மேல்நாடுகளிலே குழந்தை கருவிலிருக்கும்போதே அதன் வளர்ச்சிக்கான ஆலோசனைகளைப் பெற சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் குழந்தை

களை வளர்ப்பதற்கென்றே ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளில் மேல் மாடியிலே திறந்த வெளியிலே சூரிய ஒளி மிகுதியாகக் கிடைக்காத காலத்தில், செயற்கையாகப் பல கிரணங்களை உண்டாக்கி அவற்றில் குழந்தைகளை இருக்கச் செய்கிறார்கள். நம் நாட்டிலே சூரிய ஒளிக்குப் பஞ்சமே இல்லை. குழந்தைகளை வளர்க்க ஏற்ற ஆலோசனைகளைக் கூறும் ஸ்தாபனங்கள்தான் குறை. நாடு முழுவதும் மருத்துவச் சாலைகளும், குழந்தை வளர்ப்பு முறைகளை எடுத்துக் கூறும் ஸ்தாபனங்களும் ஏற்பட்டால் இன்று இந்நாட்டிலே மிகப் பெரியதாக இருக்கும் குழந்தை மரணம் என்ற பரிதாபகரமான நிலைமை மாறிவிடும்.

உணவு, உறக்கம், உபாதைகளைத் தீர்த்தல் முதலியவற்றில் ஒழுங்காகப் பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அது வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

குறிப்பிட்ட காலத்தில் தூங்கி ஓய்வுபெறச் செய்தல், இயற்கை உபாதைகளைத் தீர்த்துக் கொள்ளுதல் என்பவை நல்ல பழக்கங்கள். இப்பழக்கங்கள் பிடிபட்டு விட்டால் பல நன்மைகள் உண்டு. ஆகையால் இவற்றை உண்டு பண்ணுவதில் பெற்றோர்கள் சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தினைப் பற்றி எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். சில பெற்றோர்கள் தங்கள் சௌகரியத்திற்கென்றே இப்படிப்பட்ட பழக்கங்களை உண்டாக்குகிறார்கள். குறிப்பிட்ட காலத்தில் உணவை ஓர் அளவோடு கொடுப்பதையோ, மலஜல உபாதைகளைப் போக்குவதையோ ஒரு பிடிவாதமாக வைத்துக்கொண்டு அவற்றிற்கெனக் குறிப்பிட்ட காலக் கிரமத்தையே கவனிப்பது சரியல்ல. காலக்கிரமமும், பழக்கமும் குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுவதற்காகவே ஒழிய, மணியாகிவிட்டது உணவு உட்கொண்டே தீரவேண்டும்—அதுவும் இவ்வளவு பாலையோ வேறு உணவையோ

சாப்பிட்டே ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்த அல்ல. குழந்தையை அப்படி முற்றிலும் ஒரு கால நியதிக்கு அடிமையாக்கிவிடக்கூடாது. இன்று வயிறு ஒரு மாதிரி யாக இருந்தால் அதற்கேற்றவாறு காலத்தையோ, உணவின் அளவையோ மாற்றத்தான் வேண்டும். இம் மாதிரி சந்தர்ப்பங்களில் கால அட்டவணையை விடத் தாயின் இயல்புணர்ச்சியே தகுந்த வழிகாட்டியாகும். பொதுவாக மேலே சொன்ன பழக்கங்களை இளமை யிலேயே உண்டாக்குதல் நல்லதென்பதை மனத்தில் வைத்துக்கொண்டு குழந்தையின் உடல் நிலை மன நிலைகளை யும் அனுசரித்து நடக்கவேண்டும்.

இனி உள்ள வளர்ச்சியைப் பற்றிச் சிறிது கவனிப் போம். உடல் வளர்ச்சியையும், உள்ள வளர்ச்சியையும் தனித்தனி சம்பந்தமில்லாதவையாகக் கருதக்கூடாது. இரண்டிற்கும் சம்பந்தமிருக்கிறது. உடல்நிலை உள்ளத் தையும், உள்ள நிலைமை உடலையும் பாதிக்கின்றன. ஆனால் சௌகரியத்திற்காக உள்ளத்தைத் தனியாகப் பிரித்து நோக்கும்போது, அதன் வளர்ச்சியைச் சில விஷயங்கள் முக்கியமாகப் பாதிக்கின்றன என்பது தெரிகின்றது. பெற்றோர்களின் வாழ்க்கைக்கும் குழந்தையின் உள்ள வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது.

வீடு குழந்தையின் உலகம். அங்குதான் அது வாழ்க் கைக்கு வேண்டிய பாடங்களை முதலில் கற்றுக் கொள் கிறது; அதன் உடலும் உள்ளமும் வளர்ச்சியடைகின்றன; அதன் உணர்ச்சி, தன்மையெல்லாம் மலர்கின்றன. ஆதலால் குழந்தையின் பூரண வளர்ச்சிக்கு வீடு ஆதி காரணமாகின்றது. அதாவது பெற்றோரையும், அவர் களுடைய வாழ்க்கையையுமே குழந்தையின் வளர்ச்சி முக்கியமான அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. பெற்றோர் தமது வாழ்க்கையையும், குழந்தையிடம் நடந்து

கொள்ளும் வகையையும் சரியானபடி அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

குழந்தையிடம் பெற்ரேர்கள் அன்பு செலுத்துகிருர்கள். குழந்தையின் வளர்ச்சிக்கு அன்பு பிரதானம் என்ருலும் அதிலும் ஒரு வரையறை இருக்க வேண்டும். கண்மூடித்தனமாகக் காண்பிக்கும் அதிக அன்பினுலும், பாதுகாப்பினுலும் குழந்தையின் சுய நம்பிக்கை, சுய முயற்சி முதலிய தன்மைகள் வளராமல் போகின்றன; குழந்தை வயது வந்த காலத்திலும் எதற்கும் பிறரை எதிர்பார்த்து நிற்கவே முயல்கின்றது; உலகத்தில் எல்லோரும் பெற்ருேரைப்போல அன்போடும் ஆதரவோடும் இருப்பார்களென எண்ணி ஏமாற்றமடைகின்றது.

அதே சமயத்தில் அன்பு குறைவாக உள்ள இடத்திலும் குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. சில பெற்ருேர்களுக்கு இயல்பாக அன்பிருந்தாலும் அதைக் குழந்தைக்கு ஓரளவுகூடக் காண்பிக்கக்கூடாது என்று எண்ணிக் குழந்தையிடம் கண்டிப்பாக நடந்து கொள்வார்கள். அப்படி நடப்பதுதான் குழந்தையைச் சரியான முறையில் வளர்ப்பதாகும் என்பது அவர்கள் நினைப்பு. மேலும் வாழ்க்கையில் குழந்தை சிறந்து விளங்கவேண்டும் என்ற ஆசையால் அதனிடம் காணப்படும் குறைகளையே எடுத்துக் காட்டுவதும், மற்ற குழந்தைகளோடு ஒப்பு நோக்கி அதைத் தாழ்த்திப் பேசுவதும், குற்றத்திற்காகக் கடுமையான தண்டனை விதிப்பதும் ஒரு சிலருடைய பழக்கமாக இருக்கின்றன. இவையெல்லாம் குழந்தைக்குப் பாதகமாகவே முடியும்.

ஆதலால் பெற்ருேர்கள் தமது நடத்தையை நன்கு ஆராய்ந்து, குழந்தையிடம் அளவாக அன்பு செலுத்த முயல வேண்டும். குழந்தை எதற்கெடுத்தாலும் தம்மையே எதிர்பார்த்திருப்பதைக் கண்டு பெற்ருேருக்குத் தம்மை

யறியாமலே ஒரு திருப்தி ஏற்படுவதுண்டு. அதைப் போக்கிக் கொண்டு குழந்தை தானகவே தனக்கு வேண்டிய சிறு சிறு காரியங்களைச் செய்துகொள்ள உற்சாகமளிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் குழந்தை தன்னம்பிக்கை பெற்று வாழ்க்கையில் வெற்றிபெற முடியும்.

சில பெற்ருேர்கள் தங்கள் குழந்தை விரைவில் ஏதாவது ஒரு துறையில் மிகச் சிறந்து விளங்கவேண்டுமென்று ஆசைப்படுகிருர்கள். அந்த ஆசையால் அவர்கள் குழந்தையை அதன் இயல்புக்கும், சக்திக்கும், உள்ள வளர்ச்சிக்கும் அப்பாற்பட்ட காரியங்களைச் செய்யத் தூண்டுகிருர்கள். அப்படிச் செய்ய முயன்று குழந்தை தளர்ச்சியடைகின்றது. தனது முயற்சி கைகூடாமற் போவதால் தாழ்மை உணர்ச்சியும் பெறுகின்றது. அதனுல் பிற்காலத்தில்கூட அக்காரியத்தில் வெற்றி பெருமல் போக நேரிடும்.

இன்னும் சில பெற்ருேர்கள் தங்களுக்குப் பிடித்தமான ஒரு துறையில் குழந்தை சிறப்படைய வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். குழந்தையின் இயல்பான திறமையை அவர்கள் கவனிப்பதில்லை. உதாரணமாக ஒரு சிறுவனுக்கு வைத்தியத் துறையில் இயல்பாகவே திறமை இருக்கலாம். அத்துறையில் முன்னேற்றமடைய அவனுக்கு ஊக்கமளித்தால் அவன் அதில் சிறந்து விளங்குவான். அப்படிச் செய்யாமல் அவனை ஒரு முதல்தர சங்கீத வித்வானுக்க வேண்டுமென்று விரும்பினுல் அதில் வெற்றி கிடைக்காமல் போவதோடு, அவனுக்கு இயல்பாயமைந்துள்ள திறமையை விரிவடையச் செய்வதற்கும் சந்தர்ப்பமில்லாமற் போய்விடும். ஆதலின் இவற்றையெல்லாம் நன்கு கவனித்துச் சிறுவர்களை அவர்களுடைய இயல்பின் படி வளர நாம் உதவ வேண்டும்.

பொதுவாகத் தொகுத்துக் கூறுமிடத்து சிறுவர்கள் தங்களுடைய திறமைகளெல்லாம் பூரண மலர்ச்சிபெற்று

வளர்வதற்கு அன்பும் ஆதரவும் முக்கியம். இந்த அன்பும் ஆதரவும் எல்லை கடந்திருக்குமானால் அவையே குழந்தையின் வளர்ச்சிக்குப் பாதகமாகின்றன. அப்படிப் போகாமல் குழந்தைகளுக்குத் தமதிஷ்டம்போல நடமாடவும், எண்ணவும், எண்ணங்களை வெளியிடவும் சுதந்திரமிருக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொண்டால் அதுவே குழந்தைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகி விடுகிறது. அப்போது குழந்தையின் சுயேச்சையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமும் அநேகமாக ஏற்படாது.

# 4. பேச்சும் பாட்டும்

ஒவ்வொரு குழந்தையும் நன்முக வளர்ந்து, உலகத்திலே தனது ஸ்தானத்தைக் குறையில்லாமல் வகித்து, மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அதன் கடமையைப் பூரணமாகச் செய்யவேண்டுமாஞல் அதன் திறமைகள் அனைத்தும் மலரும்படியாக வளரவேண்டும். அப்படி வளர்ந்தால்தான் அக்குழந்தையால் உலகத்திற்கு நன்மை உண்டு. அதை வெற்றிகரமாகச் செய்வதற்கு அத்தியாவசியமாக வேண்டுவது ஒன்று. அதாவது அன்பும் ஆதரவும் உள்ள சூழ்நிலையில் குழந்தை சுதந்திரமாக வளர வேண்டும்.

ஒரு அழகான மெல்லிய பூச்செடி நன்கு வளர்வதற்கு நிலத்தை வேண்டியவாறு பண்படுத்தி மற்ற சௌகரியங்களையும் செய்துவிட்டால் அது தாஞகவே வளர்ந்து அதன் எழிலும் நறுமணமுமாகிய பயனை உலகத்திற்குத் தருகின்றது. அதுபோலவேதான் பூங் குழந்தையும். அதன் பூரண வளர்ச்சிக்கு அன்பு வேண்டும், அனுதாபம் வேண்டும். அவற்றைவிட முக்கியமாகச் சுயேச்சை வேண்டும்.

பெற்ருேருக்குக் குழந்தையிடம் இயல்பாகவே அன்பிருக்கின்றது. அந்த அன்பிஞல் அவர்கள் குழந்தையை நன்கு வளர்க்க ஆசைப்படுகின்ருர்கள். அது உலகத்தில் தலைசிறந்து விளங்கவேண்டுமென்று திட்டங்கள் வகுக்கிருர்கள். ஆஞல் அவர்களுடைய ஆசையையும் திட்டங்களையும்விட அவர்கள் வாழும் வாழ்க்கையமைப்பே குழந்தையின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது ; அவர்கள் குழந்தையிடம் நடந்துகொள்ளும் வகையும் மிக முக்கிய

மானது. ஏனெனில் திட்டங்களையும் விதிகளையும் விட இவைதான் குழந்தையின் உள்ளத்திலே அதிகமாகப் பதிகின்றன. வீட்டு வாசலிலே பிச்சைக்காரியைக் கண்டதும் பாட்டி அவளை வாயில் வந்தபடி வைகிறாள். குழந்தை அதைக் கவனித்துக் கொண்டே இருக்கிறது. அம்மாளுக்கு வேலைக்காரியின்மேல் அதிருப்தி. அதனால் என்ன என்னவோ பேசி விடுகிறாள். குழந்தை பக்கத்தில் நின்று அதையும் கேட்டுக் கொண்டிருக்கிறது. கணவனுக்கும் மனைவிக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டுவிடுகிறது. பேச்சும் வளர்ந்து விடுகிறது. தாங்கள் நன்கு வளர்க்கவேண்டுமென்று திட்டம் வகுத்த குழந்தை அருகில் இருப்பதைக் கூட அவர்கள் பொருட்படுத்துவதில்லை. பிறகு குழந்தை தான் கேட்டவற்றையே திருப்பிப் பேசினால் அதன்மேல் குற்றம் கூறி என்ன செய்வது? அப்படியெல்லாம் பேசாதே என்று அதட்டி அதன் வாக்குச் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து என்ன பயன்பெற முடியும்? பெற்றோரும் வீட்டில் உள்ள மற்றவர்களுந்தானே அதற்கு உதாரணம்? அவர்களைப் பார்த்துத்தானே குழந்தை பழக வேண்டும்?

இம்மாதிரி சந்தர்ப்பங்களில் நமது நடத்தையை மாற்றிக்கொள்ள வேண்டுமே தவிரச் சிறுவர்களை அவ்வாறு பேசக் கூடாது என்று தடுப்பதால் யாதொரு நன்மையுமில்லை. பெரியவர்களைப்போல நான் ஏன் பேசக்கூடாது என்ற ஐயமும் குழப்பமுந்தான் குழந்தை உள்ளத்தில் ஏற்படும்.

குழந்தை பூமியிற் பிறந்தவுடன் அழுகிறது. இது உண்மையில் அழுகையல்ல. காற்று சுவாசப் பையில் புகுந்து வெளிவருவதால் ஆரம்ப காலத்தில் உண்டாகும் சப்தமே அழுகையாகக் கருதப்படுகின்றது. பின்பு அழுகையே குழந்தைக்கு ஏற்படும் பசி, தாகம், வலி,

துன்பம் முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் வாக்காக அமைந்து விடுகிறது. ஆகவே குழந்தை தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்குச் சுதந்திரத்துடன்தான் பிறக்கிறது. அதைக் கட்டுப்படுத்த முயலாமலிருப்பது தான் குழந்தையின் மலர்ச்சிக்கு உதவி செய்ததாகும். வாக்குச் சுதந்திரத்தை இழிந்த முறையில் கையாளாமல் பார்த்துக் கொள்வதற்கு நமது உதாரணமும், நாம் அமைத்துக் கொடுக்கும் சூழ்நிலையுமே சரியான வழிகளாகும்.

குழந்தையின் உணர்ச்சிகளை வெளியிடுவதற்கு வேண்டிய சந்தர்ப்பமில்லாமல் அவைகளை அடங்கிக் கிடக்கும்படி செய்வதால் மறை உள்ளத்திலே (Unconcious mind) பல குழப்பங்கள் ஏற்பட்டுப் பிற்காலத்திலே அவை வெவ்வேறு துறைகளில் விரும்பத்தகாத முறைகளில் வெளியாவதற்குக் காரணமாகின்றன. சிறுவர்களின் வளர்ச்சியிலே அவர்கள் உள்ளத்தில் எழுந்து குமுறும் உணர்ச்சிகளைத் தாராளமாக யாராவது ஒருவரிடமாவது வெளியிடும் சுதந்திரமும் நம்பிக்கையும் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறவும் அவர்கள் உள்ளத்தைத் திடப்படுத்தி உயரச் செய்யவும் வழி கிடைக்கும்.

இனிப் பேசப் பழகும் இளங் குழந்தை ஒரு சொல்லை உச்சரிக்கப் பழகிக் கொண்டால் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லி மகிழ்கின்றது. அதன் ஆரம்பப் பேச்சுத் திருத்தமாக அமையாவிட்டாலும் அதற்காகக் கேலி செய்வது பெருந் தவறாகும். குழந்தையின் வாக்கு வளர்ச்சிக்குப் பாதகம் செய்ததாகும். அன்போடும் அனுதாபத்தோடும் சரியான உச்சரிப்பைச் சொல்லிக் கொடுக்கலாம். சிறுவர்கள் பேசும்போது இடையிடையே தடைப்படுத்தி, இப்படிச் சொல்லாதே அப்படிச் சொல் என்று திருத்தம் செய்து கொண்டே யிருப்பதும் சரியல்ல. அவ்வாறு செய்வதால்

சிறுவனுக்குத் தன் பேச்சிலேயே நம்பிக்கை குறைந்து பிறகு எதற்கெடுத்தாலும் பிறருடைய திருத்தத்தையே எதிர்பார்க்க ஆரம்பிப்பான். இது கடைசியில் திக்கித் திக்கிப் பேசும் பழக்கமாய் முடியும்.

ராமசாமி என்ற பள்ளிச் சிறுவனுக்கு ஏழு வயதிருக்கும். அவனை 'அச்சமில்லை அச்சமில்லை' என்ற பாரதியார் பாட்டை யார் பாடச் சொல்லிக் கேட்டாலும் உற்சாகத்தோடும் அபிநயங்களோடும் பாடுவான்.

அவனுடைய அபிநயத்தை அபிவிருத்தி செய்ய விரும்பிய சிலர் அவன் பாடும்போது இடையிடையே தடை செய்து வந்ததால் இப்பொழுது அவன் திக்குவாயனாய் விட்டான். இரண்டு வார்த்தை சேர்த்துப் பேசவும் சிரமப் படுகிறான்.

வாக்குச் சுதந்திரத்தின் அவசியத்தையும் பயனையும் குழந்தைகளின் கேள்விகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். குழந்தை சதா கேள்வி கேட்கும். ஒரு குழந்தையின் கேள்விகளைப் பாருங்கள். உதாரணத்துக்காக அவற்றைச் சொல்லுகிறேன்.

ரேடியோவில் பேச்சுக் குரல் கேட்கிறது. குழந்தை கேட்கிறது: "அப்பா, யார் பேசறது?" "ரேடியோ அண்ணா பேசறார்." "எங்கே அவரைக் காணுமே?" "அவர் சென்னையில் இருக்கிறார்." 'இந்தப் பெட்டிக்குள்ளா இருக்கிறார்?" "இல்லை சென்னையிலே—தூரத்திலே இருக்கிறார்." குழந்தைக்கு இது ஒன்றும் விளங்கவில்லை. மறுபடியும் கேட்கிறது. "அங்கிருந்துபேசினா இங்கே எப்படிக் கேட்கும்?"

இப்படிக் கேள்விகள் வளர்ந்து கொண்டே போகும். சில கேள்விகளுக்குப் பதில் சொல்வது வெகு சிரமம். சிலவற்றிற்கு நமக்கே பதில் தெரியாது. அதனால் கேள்வியே கேட்கக் கூடாதென்று குழந்தையை அதட்டி மிரட்டி

அடக்கிவிடலாமா? கூடவே கூடாது. குழந்தையின் அறிவை வளர்ப்பதற்கு அவை பெரிய சாதனம். அதனால் கேள்வி கேட்பதை நாம் ஆதரிக்க வேண்டும்; கேள்விக்குச் சுலபமான பதிலும் பொறுமையோடு சொல்ல வேண்டும். தெரியாதவற்றைத் தெரிந்து சொல்ல வேண்டும். குழந்தைக்கு விளங்கும்படியான பாஷையில் பதில் அமைய வேண்டும். கேள்வி கேட்பதைத் தடுத்தால் குழந்தையின் அறிவு வளராது, உள்ளம் விரிவடையாது, ஆராய்ச்சி மனப்பான்மையும் தேய்ந்து போகும்.

கதை கேட்பதிலே, பாட்டுக் கேட்பதிலே சிறுவர்களுக்கு நிரம்ப ஆசை. அதைப் போலவே கேட்டவற்றைத் திருப்பிச் சொல்வதிலும் ஆசையுண்டு. வயதிற் கேற்ற கதைகளையும் பாட்டுக்களையும் சொன்னால் அவற்றை அவர்கள் உடனே பிடித்துக்கொள்வார்கள்.

கதைகளைத் திருப்பிச் சொல்வதாலும் பாட்டுக்களைப் பாடுவதாலும் குழந்தையின் வாக்கு வன்மை அதிகரிக்கின்றது. 'நிலா நிலா வா! வா!—சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' என்பன போன்ற பாடல்களைக் குழந்தைகள் பாடி மகிழ்கின்றார்கள். குழந்தைப் பாடல்களும், சுலபமான கதை தழுவிய பாடல்களும், அபிநயப் பாடல்களும், சிறு சிறு கதைகளும் குழந்தைகளுக்கு நிறைய வேண்டும்.

இன்னும் ஒரு முக்கிய விஷயம். சிறுவர்களுக்குத் தங்கள் எண்ணங்களைத் தாராளமாக வெளியிட உரிமை இருக்க வேண்டும். குழந்தையின் மழலையைக் கேட்டுப் பெரியவர்கள் ஆனந்திக்கிறார்கள். ஆனால் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிச் சிறுவன் பேச வாயெடுத்தால் அது அதிகப் பிரசங்கித்தனம் என்று கருதப்படுகிறது. சிறுவனுக்கு அதில் பிரவேசிக்க அருகதை யில்லையென்பது பொதுவான தீர்மானம். பள்ளிகளிலும் இந்தத் தீர்மானந் தான் வெகுவாக அரசு செலுத்துகின்றது. பேச்செல்லாம்

உபாத்தியாயரின் ஏகபோக உரிமை. சிறுவன் அதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான். அவனுக்கும் தனது குழந்தை உள்ளத்தின் உணர்ச்சியின்படி அபிப்பிராயம் உண்டென்பதைச் சாதாரணமாக அனைவரும் மறந்து விடுகிறோம். சிறுவன் அதை எவ்வாறு நோக்குகிறான், அவனுக்கு அவ்விஷயம் பற்றிய எண்ணம் யாது என்பனவற்றை நாம் அறியுமாறு வெளியிட அவனுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

பேச்சுச் சுதந்திரம் கொடுத்தால் சிறுவர்கள் அடங்கியிருக்கமாட்டார்கள் என்ற பய உணர்ச்சியே இன்று மேலோங்கி நிற்கின்றது. ஆனால் அந்தப் பயத்திற்கு ஆதாரமே இல்லை. புது முறையிலே நடைபெறும் பள்ளிகளில் சிறுவர்களுக்குத் தம் எண்ணங்களை வெளியிடும் உரிமை கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் கட்டுப்பாட்டை மீறி நடப்பதாகக் காணோம்.

சிறுவர்கள் கூறுவதெல்லாம் சரியாக இருக்குமென்று நான் சொல்ல வரவில்லை. தவறுகள் இருக்கலாம். ஆனால் பேச்சுரிமை கொடுப்பதாலேயே நாம் எளிதில் அத்தவறுகளை அறிந்துகொள்ள முடியும். பின்பு அவற்றைக் களையவும் வழி தேடலாம். வாக்குச் சுதந்திரமே இல்லாத இடத்தில், வீட்டிலும் சரி, பள்ளியிலும் சரி, இந்தச் சந்தர்ப்பம் வாய்ப்பதரிது. சிறுவனும் ஆழ்ந்து சிந்தித்து முடிவான எண்ணங்களை வெளியிடப் பழகிக்கொள்ள இயலாது. பிற்காலத்தில் அவனுக்கு வாழ்க்கையில் கிடைக்கவிருக்கும் வாக்குச் சுதந்திரத்தை அவன் சரியானபடி உபயோகிக்க வேண்டுமானால் சிறு வயது முதற்கொண்டே அதில் பயிற்சி பெற வேண்டும்.

# 5. ஓடி விளையாடு பாப்பா

குழந்தை அங்கும் இங்கும் ஓடுகிறது. நீர்த் தொட்டியிலே கையை விட்டுத் தண்ணீரைச் சுற்றிலும் இறைக்கிறது; மேலெல்லாம் நனைத்துக்கொள்கிறது; சொக்காயெல்லாம் ஒரே ஈரம். தண்ணீருக்குள்ளே கையை விட்டுச் சளசள வென்று அரவமுண்டாக்குவதிலும், நீரை நான்கு புறமும் தெறிக்கச் செய்வதிலும் குழந்தைக்கு அத்தனை பிரியம். தாய் ஓடி வந்து கவலையோடு பார்க்கிருள். தண்ணீரிலே இப்படி அடிக்கடி நனைந்தால் குழந்தைக்குச் சளி பிடித்துக்கொள்ளுமே என்று அவளுக்குக் கவலை.

குழந்தையைக் கோபித்துக் கொள்ளுகிருள். ஒரு நாளைக்கு எத்தனை தடவை உடையை மாற்றுகிறதென்று அவள் வேதனைப்படுகிருள். குழந்தை அதற்காகக் கவலைப் படுகிறதில்லை. அடுத்த நிமிஷத்திலே அது மண்ணிலே விளையாடத் தொடங்கிவிடுகிறது. மாற்றி அணிந்த புதுச் சொக்காயில் மட்டுமல்ல, தலையிலும், உடம்பிலும் மண்ணைப் போட்டுக்கொள்ளுகிறது. தாய்க்குக் குழந்தையின் இந்தத் துடுக்குத்தனம் ஓயாத தொல்லையாக இருக்கிறது.

அதனுல் குழந்தையை விளையாடுவதிலிருந்து தடுத்து விடலாமா? கூடவே கூடாது. விளையாட்டின் மூலம் குழந்தை எத்தனை அறிவையும், அனுபவத்தையும், அவயவங்களை உபயோகிப்பதில் பயிற்சியையும் பெறுகிறது என்பதை உணர்ந்தால் யாரும் குழந்தையின் விளையாட்டைத் தடுக்க நினைக்க மாட்டார்கள். விளையாட்டின் மூலம் குழந்தையின் மனமும் நன்கு மலர்ச்சியடைகிறது. மற்ற

குழந்தைகளோடு சேர்ந்து விளையாடும்போது இன்னும் எத்தனையோ அவசியமான அனுபவங்கள் குழந்தைக்குக் கிடைக்கின்றன. சமூகத்திலே மக்களோடு கலந்து பிற்காலத்தில் வாழ வேண்டிய குழந்தைக்கு இவையெல்லாம் தேவை. பிறரோடு சேர்ந்து வாழத் தெரிந்துகொள்ளுவதே ஒரு கலை. அதைக் குழந்தைப் பருவத்திலிருந்தே ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

சுயநலத்தையே எண்ணிக் கொண்டிருப்பவர்களை நாம் போற்ற மாட்டோம். பச்சைக் குழந்தையைப் போலச் சுயநலத்திலே யாரும் அவ்வளவு பற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள். அதற்குத் தனது வாழ்க்கையும் சுகமும் தான் பெரிது. அம்மா அதையே கவனிக்க வேண்டும்; அதற்கு வேண்டியதையெல்லாம் உடனுக்குடனே எல்லோரும் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் குழந்தைக்குத் திருப்தி கிடையாது. வேறு குழந்தையொன்றை அம்மா கையிலெடுத்து மடியில் வைத்துக் கொண்டால் இதற்கு ஒரே ஆத்திரம் பொங்கிவிடும். விளையாட்டுப் பொம்மையை அம்மா வேறு யாருக்கும் கொடுக்கக் கூடாது. இப்படியெல்லாம் தனது இன்பத்தையே நாடிக் கொண்டிருக்கும் குழந்தை மற்ற குழந்தைகளோடு சேர்ந்து பழகும்போதும் விளையாடும் போதும்தான் மற்றவர்களுடைய இன்பத்தையும், சௌகரியத்தையும் கவனிக்க வேண்டும் என்பதைச் சிறிது சிறிதாக உணர்கின்றது. மற்றக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடும்போது சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை, முன்னின்று நடத்தும் திறமை, தலைவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தன்மையெல்லாம் இயல்பாக அமைகின்றன.

தண்ணீரும், மண்ணும், மணலும் குழந்தைக்கு இயற்கையிலேயே எளிதாகக் கிடைக்கும் விளையாட்டுப் பொருள்கள். அவைகளைக் கூடாதென்று நாம் தடுப்பது சரியல்ல.

தண்ணீரை ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொன்றில் ஊற்றுவதென்றால் குழந்தைக்கு ஒரே ஆனந்தம். கொஞ்சம் வயதான குழந்தைகள் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதிலும், துணிகளைத் துவைப்பதிலும், வாசலுக்கு நீர் தெளிப்பதிலும், பாத்திரங்களைத் துலக்குவதிலும் அளவிலா மகிழ்ச்சி கொள்ளுகின்றன.

மண்ணைப் பிசைந்து பண்டங்கள் செய்வதும், மணலிலே சிறு வீடு கட்டிக் குடும்ப வாழ்க்கையையே விளையாட்டாக நடத்துவதும் குழந்தைகளுக்குப் பெரியதோர் உற்சாகத்தைத் தருகின்றன. வீட்டிலே கண்ட செயல்களையெல்லாம் அவைகள் தங்கள் விளையாட்டிலே நடிக்கின்றன; வீட்டிலே கேட்கின்ற பேச்சுக்களையும் அப்போது பேசுகின்றன.

இந்த விளையாட்டுக்களுக்கு வசதி செய்வதில் அதிகப் பொருட் செலவு கிடையாது. வீட்டோடு சேர்ந்துள்ள காலி யிடத்திலே அதற்கு ஏற்பாடு செய்யலாம். நாம் செய்யாவிட்டாலும் குழந்தைகள் அந்த இடத்தைத் தாமே தேடிக்கொண்டு செல்லும். நகரங்களிலே பல வீடுகள் காலியிடமில்லாமல் தெருவோடு சேர்ந்தாற் போலவே இருக்கும். அப்படிப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் களிமண் சேகரித்து வேறு வசதிகள் செய்ய முயல வேண்டும். கொஞ்சம் அதை வீட்டில் ஒரு பக்கத்திலே ஒரு சிறு தொட்டியில் வைத்துக்கொள்ளலாம். தண்ணீர் விட்டுப் பிசைந்து களிமண்ணில் பொம்மைகளும், சிறு சிறு பாத்திரங்களும் செய்வதில் குழந்தைகளுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. வீட்டில் காலியிடம் இல்லாவிட்டாலும் மாலை வேளைகளில் பொது விளையாட்டு மைதானங்களுக்கும், தோட்டப்புறங்களுக்கும் அழைத்துச் செல்லலாம். கடற்கரையின் அருகிலும், நதிக்கரையின் அருகிலும் வசிப்பவர்கள் தங்கள் குழந்தை

களை அங்கு அழைத்துச் சென்று மணலிலே விளையாடு வதற்கு அடிக்கடி சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

குழந்தைக்கு ஏதாவது ஒரு பொருளை உண்டாக்கு வதில் எல்லையில்லாத இன்பமிருக்கிறது. பெற்றேரையும் மற்றவர்களையும் பல விஷயங்களுக்கு எதிர்பார்த்து நிற்கும் குழந்தை தானுகவே ஒன்றைச் செய்யும்போது தன்னம் பிக்கை பெற்று உற்சாகமடைகிறது. அதற்கு நாம் அன் போடு உதவ வேண்டும். குழந்தையின் கற்பனைத் திறனும் அதில் மலர்ச்சி யடைகின்றது.

அத்திறனை வளர்ப்பதற்கு வர்ணக் கலவைகளும் பெரிதும் உதவியாக இருக்கும். மலிவாகக் கிடைக்கும் சுவர்ப்பூச்சு வர்ணங்களே போதும். அவற்றைத் தண் ணீரில் கரைத்துக் கொடுத்துவிட்டால் குழந்தைக்கு எவ்வளவோ ஆநந்தம். பல்லுக் குச்சிக்குப் பயன்படும் ஏதாவது நாருள்ள ஒரு குச்சியின் ஒரு முனையை நன்ருகத் தட்டிப் புருசு போலச் செய்து கொடுத்தால் குழந்தைக்கு அதுவே திருப்தி. சாதாரணக் காகிதமே போதும். ஓவியர்கள் உபயோகிக்கும் விலையதிகமான காகிதமொன்றும் தேவை யில்லை. குழந்தைக்குத் தனது உணர்ச்சிகளை யெல்லாம் வார்த்தையிலே சொல்ல இயலாது; ஆனுல் அவற்றைச் சித்திரங்களாக வரைந்து காட்ட முயலும்.

குழந்தைகளுக்கு ஆடுவதிலும், நடிப்பதிலும் மிகுந்த பற்றுதலுண்டு. எளிதாக அபிநயம் செய்து கொண்டு பாடுவதற்கு ஏற்ற பாடல்கள் பல இருக்கின்றன. அவற் றைச் சொல்லிக் கொடுக்கலாம். குழந்தைகளின் வயதிற்குப் பொருத்தமான சிறு நாடகங்களையோ காட்சிகளையோ நடிக்கச் செய்யலாம். இவையெல்லாம் விளையாட்டுப் போலவே நடைபெற வேண்டும். தேர்ந்த நடிகர்களின் பாணிகளைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பி இவ் விளையாட்டுக்களையே ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது.

ஓவியம் வரைதலும், நாடகம் நடிப்பதும் பிற்காலத்திலே குழந்தைகளைப் பெரிய ஓவியர்களாகவோ, நடிகர்களாகவோ செய்வதற்கென்று யாரும் நினைக்ககூடாது. அக்கலைகளிலே இயல்பான திறமை யிருந்தால் ஒருவேளை அவர்கள் அவ்வாறு சிறப்படையலாம். அதற்குக் குழந்தைப் பருவத்தில் கிடைத்த சந்தர்ப்பம் பெரிதும் துணையாக இருக்கும். ஆனால் குழந்தைகளுக்கு இக்கலைகளில் உற்சாக மூட்டுவது பொதுவாக அவர்களுடைய உடல் வளர்ச்சிக்கும், மனவளர்ச்சிக்கும் உதவி செய்வதற்காகத்தான். இன்பமும் விளையாட்டும் நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் தங்களுக்கு இயல்புத்திறன் எந்தத் துறையிலிருந்தாலும் அது மேலோங்குவதற்கு வேண்டிய உணர்ச்சியையும் தன்னம்பிக்கையையும் பெறுகின்றன. அவ்வாறு பெற உதவி செய்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

பொதுவாகக் குழந்தை ஒரே விளையாட்டில் நீண்டநேரம் ஈடுபட்டிருப்பதில்லை. அதேபோல ஒரே பொம்மையோ அல்லது விளையாட்டுக் கருவியோ அதற்கு எப்பொழுதும் இன்பமளிக்காது. புதுமையிலே குழந்தைக்கு ஆர்வம் அதிகம். புது அநுபவங்களை அது ஆவலோடு தேடுகின்றது. அதனால் புதிது புதிதாகப் பல விளையாட்டுப் பொருள்களை வாங்கிக் கொடுப்பது எல்லோருக்கும் இயலாதென்று கருதலாம். இங்கு நாம் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். விளையாட்டுப் பொருள்கள் என்றால் விலை அதிகமானவைகளாகவே இருக்கவேண்டுமென்பதில்லை. குழந்தைகள் விளையாடும் போது அவைகளை சேகரித்து வைத்துக்கொள்ளும் பொருள்களைச் சற்றுக் கவனித்தால் இந்த உண்மை புலனாகும். ஒரு மூங்கில் கம்பை எடுத்து இரண்டு கால்களுக்கும் இடையே வைத்துக்கொண்டு குழந்தை குதிரை சவாரி செய்ய ஆரம்பித்துவிடும்.

உடைந்துபோன கொட்டாங்கச்சியை எடுத்துத் தொட்டிலிலே போட்டு அதைக் குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டுவதை நான் கண்டிருக்கிறேன். ஆகையால் சிறிது யோசனை செய்து பார்த்தால் நாமே பல பொருள்களை அவர்களுக்கு உண்டாக்கிக் கொடுத்துவிடலாம். கன சதுரமும், கன செவ்வகமுமான மரக்கட்டைகள், கிளிஞ்சல்கள், ஆற்றிலே பல நிறங்களில் கிடைக்கும் வழு வழுப்பான கூழாங்கற்கள் முதலானவைகளெல்லாம் குழந்தைக்கு இன்பமளிக்கும் விளையாட்டுப் பொருள்களாகும். இன்னும் எத்தனையோ கருவிகளைச் சாதாரணமாகக் கிடைக்கும் வஸ்துக்களைக் கொண்டு நாம் உருவாக்கிவிடலாம். நல்ல பளபளப்பான பச்சை, சிவப்பு முதலிய வர்ணங்களைக் கண்டு குழந்தை மகிழ்ச்சியடைகிறது. அவற்றைப் பூசிய விளையாட்டுப் பொருள்கள் பலவற்றை நாமே செய்து கொடுக்க முடியும்.

வீட்டுக் காரியங்கள் பலவற்றிலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று குழந்தை விரும்புகிறது. பெருக்குவது, கோலம் போடுவது, காய் நறுக்குவது என்றிப்படிக் காரியங்கள் செய்வதென்றால் அதற்கு ஓரே உற்சாகம். விளையாட்டாகவே குழந்தை அவற்றைச் செய்யும். அவ்வாறு செய்து உதவுவதனால் தானும் பெரியவர்களைப் போலத் தொழில் செய்வதாக உணர்ந்து உள்ளத்திலே பெருமையடைகிறது. தனக்குப் பல வழிகளிலே பணி செய்யும் தாய்க்குத் தானும் உதவியாகக் காரியம் செய்வதால் இன்பமடைகிறது. கொஞ்சம் பொறுமையோடு குழந்தைக்கு இவ்வித சந்தர்ப்பங்களை அளிக்கவேண்டும்.

"அது சின்னக் குழந்தை; அதெற்கென்ன தெரியும்?" என்று சிலர் அடிக்கடி குழந்தையின் முன்னால் பேசுவார்கள். பேசுவதோடு நில்லாமல் குழந்தையைச் சிறு சிறு காரியங்கள் செய்யாமலும் தடுப்பார்கள். இவ்விதம் செய்வது அதன் மன வளர்ச்சியைத் தடுப்பதாகும். தன்னால்

எந்தக் காரியமும் செய்ய முடியாது என்று நாளடைவிலே எண்ணிக் குழந்தை தாழ்மை உணர்ச்சி பெறவும் காரணமாகிவிடும். வாழ்க்கையிலே வெற்றி பெறுவதற்குத் தடையாகவும் ஏற்பட்டுவிடும்.

பூனைக் குட்டிகள், நாய்க்குட்டிகள் முதலானவைகளைக் கவனித்தால் அவை சதா விளையாடிக் கொண்டிருப்பது தெரியவரும். அவையெல்லாம் தமது அவயவங்களைச் சரிவர உபயோகிப்பதில் பயிற்சி பெறுவதற்கும், வாழ்க்கையில் அத்தியாவசியமாகத் தமக்கு வேண்டிய திறமைகளைப் பெறுவதற்கும் அவ்வாறு செய்கின்றன. மனிதக் குழந்தையும் விளையாட்டின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றை அவை பூரணமாகப் பெற்று உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும், தன்னம்பிக்கை, உற்சாகம், துணிச்சல் முதலான பண்புகளும் பெறுவதற்கு நாம் உதவவேண்டும். அதன் வயதிற்குத் தக்கவாறு விளையாட்டுக்களும் மாறி அமையவேண்டும். பார்க்கத்தக்க இடங்களுக்கு நடந்து செல்லுதல், சிறு சிறு குன்றுகளிலும், மலைகளிலும் ஏறுதல், தண்ணீரிலே நீந்துதல் முதலியவை சற்று வயது வந்த குழந்தைகளுக்கு உகந்தவையாகும். குழந்தையிடத்திலே அன்பு மிகுந்த பெற்றோர்கள் அதைக் கவனித்து ஏற்பாடு செய்வதால் குழந்தையின் பிற்கால வாழ்க்கையின் வெற்றிக்குப் பெரிதும் உதவுகிறவர்களாவார்கள்.

குழந்தையின் உள்ளத்திலே எழும் பகைமை உணர்ச்சி முதலிய விரும்பத்தகாத உணர்ச்சிகளை விளையாட்டின் மூலம் வெளிப்படுத்திவிட முடியும். அவை உள்ளத்திலேயே அழுந்திக் கிடக்காமல் செய்யும் சக்தி விளையாட்டிற்கு உண்டு. சமூகத்திலே கூடி வாழவும், வாழ்வில் ஏற்படும் வெற்றி தோல்விகளை அமைதியாக ஏற்றுக் காரியம் செய்யவும் கற்றுக்கொள்ள விளையாட்டு உதவுகிறது என்று மனத் தத்துவர்கள் ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள்.

# 6. எண்ணித் துணியும் பேராற்றல்

மனிதனுக்குத் தனிப்பட்ட ஒரு விசேஷ சக்தி இருக்கின்றது. அது என்ன என்று யோசிக்கும்போது அந்த யோசிக்கும் சக்தியேதான் அது என்று ஏற்படுகிறது. ஆம், மனிதனுடைய தனிப் பெருமை அவனுக்குள்ள சிந்தனை சக்திதான். ஆகையால் அதை எவ்வளவுக்கு மனிதன் அபிவிருத்தி செய்து கொள்ளுகிறானோ அவ்வளவுக்கு அவன் மேம்பாடடைகின்றான்.

மனிதனுடைய ஆற்றல்களை நன்கு மலரும்படி செய்ய வேண்டுமானால், ஒரு முக்கியமான உண்மையை மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். குழந்தைப் பருவத்திலேயே மனிதனுடைய பிற்கால வாழ்க்கையின் போக்கு நிர்ணயமாகிவிடுகிறது என்று மனத்தத்துவர்கள் கண்டிருக்கிறார்கள். மறை மனத்தைப் பற்றி முதல் முதலாக ஆராய்ந்த பிராய்டு என்பவர், 'ஐந்து வயதிற்குள்ளேயே மனிதன் தனது பூரண அமைப்பையும் அநேகமாகப் பெற்றுவிடுகிறான்' என்கிறார். பலதிறப்பட்ட அபிப்பிராயங்களுடைய மனத் தத்துவர்களும் இந்த விஷயத்திலே பொதுவாக ஒரேமாதிரியான எண்ணங் கொண்டிருக்கிறார்கள். இளம் பிராயத்திலே மனிதனுடைய வாழ்க்கையின் முழு உருவம் பெரும்பான்மையும் அமைந்துவிடுகிறது என்பதுதான் அவர்களுடைய முடிவு. ஆகையால் அந்தப் பருவத்திலேயே அடக்கி ஒடுக்கப்படாது நன்கு மலர்வதற்கு வேண்டிய வசதி அளிக்கப்பட்ட ஆற்றல்களே மேலோங்கும். சிறுவர்களுடைய சிந்தனை சக்தி இந்த விதிக்கு மாறுபட்டதல்ல; இளமையிலிருந்தே

தானுகவே எண்ணிப் பார்க்கும் திறமையை வளரும்படி செய்யவேண்டும். அப்பொழுதிருந்தே அதை அடக்கி நசுக்கிவிடாமல் மேலோங்குவதற்கு வேண்டிய சுதந்திரம் அளிக்கவேண்டும். அவ்வாறு செய்தால்தான் மனிதனுக்கு விசேஷமாக வாய்த்துள்ள சக்தி அதன் இயல்பான முழு மலர்ச்சியடையும்.

வயதிற்கேற்றவாறு சிறு விஷயங்களைப் பற்றிச் சொந்தமாக எண்ணிப் பார்க்கச் சந்தர்ப்பமும், உரிமையும் இருக்கவேண்டும். எதற்கெடுத்தாலும் பெரியவர்களுடைய எண்ணத்தையும், தீர்மானத்தையுமே சிறுவன் ஏற்றுக் கொள்ள நேரிட்டால் அவனுக்குத் தனது சொந்த சக்தியை விரிவடையச் செய்து கொள்ளச் சமயமேற்படாது. உடல் உறுப்புக்களையும் பிற ஆற்றல்களையும் பயிற்சியால் திடப் படுத்துவதுபோலச் சிந்தனை சக்தியையும் பயிற்சியாலேயே திடப்படுத்த வேண்டும்.

சிறு குழந்தை தான் பார்க்கின்ற பொருள்களைப் பற்றியும் செய்கின்ற காரியங்களைப் பற்றியும்தான் முக்கிய மாக எண்ணிப் பார்க்கமுடியும். கொஞ்சம் வயது வந்த சிறுவர்கள் சிக்கல் அதிகமில்லாத லேசான விஷயங்களைப் பற்றி யோசித்து முடிவு செய்யக்கூடும். ஆனால் சத்தியம், கொல்லாமை என்றிப்படிப்பட்ட கருத்தியலான விஷ யங்களைப் பற்றிச் சிந்திப்பது சிரமம். இங்கு நாம் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதென்னவென்றால் குழந்தைப் பருவத்திலும் அதற்கேற்றபடி எண்ணமிடும் திறமை உண்டு; ஆதலால் அதற்கு வேண்டிய சமயமும் சுதந்திர மும் அளிக்க வேண்டுமென்பதே.

சிறுவர்களுக்குச் சுயேச்சையாகச் சிந்தனை செய்யச் சமயமளிப்பதுடன் அவர்கள் வெளியிடும் எண்ணங் களுக்கும் மரியாதை காண்பிக்கவேண்டும். சிறுவன் உற்சாகத்தோடு ஒரு யோசனை சொல்லுகிறன். உடனே

ஆகா, நீ மிகவும் பெரிய மனிதன்; யோசனை சொல்ல வந்துவிட்டாய்' என்று அலட்சியமாகப் பேசினால் அவன் மனம் சுருங்கிப் போய்விடும். பிறகு அவன் தானாக எண்ணமிடவும் பின் வாங்குவான். அன்போடும், அநுதாபத்தோடும் அவனுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு ஊக்கமளிக்க வேண்டும். அதிற் குறைபாடிருந்தால் நயமாக அதை மாற்றிக்கொள்ள உதவலாம்.

மேலும் குழந்தைகள் உலகமே வேறு; அவர்களுடைய எண்ணங்களும் தனிப்பட்டவையே ; அவற்றைப் பெரியவர்களின் மனப்போக்கோடு வைத்துச் சீர்தூக்கிப் பார்க்கலாகாது என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக நாம் சிறு வயதிற் கொண்டிருந்த மனப்போக்கை மறந்து விடுகின்றோம். அப்படி மறந்து விட்டு, இயல்புக்கு மாறாகப் பெரியவர்களின் மனப்போக்கைச் சிறுவர்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

திருஷ்டாந்தமாக ஒரு சிறிய சம்பவத்தை இங்கு எடுத்துச் சொல்லுகிறேன். ஒருசமயம் பல குழந்தைகள் சித்திரம் வரைந்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் தமதிஷ்டம்போல ஏதாவது படம் போட்டார்கள். ஒரு குழந்தை ஒரு பெரிய எருமையின் படம் வரைந்தது. அது அதோடு நின்றுவிடவில்லை. அந்த எருமைக்குப் பக்கத்திற்கு இரண்டிரண்டாகச் சிறகுகளும் வைத்துவிட்டது. சித்திரம் இயற்கைக்கு மாறுபட்டிருக்கிறதே என்று ஆசிரியருக்குக் கோபம். ஆனால் அந்தக் குழந்தையோ தூங்கி மெதுவாக அசைந்து நடக்கும் எருமை வேகமாக ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்று எண்ணுகிறது!

மேலும் குழந்தைக்குப் பல பொருள்கள் தோன்றும் விதம் வேறு; பெரியவர்களுக்கு அவை தோன்றும் விதம் வேறு. குழந்தைக்கு மரப்பாச்சி ஒரு குழந்தையாகவே உணர்ச்சிகளை எழுப்புகின்றது. ஒரு குச்சியைக் குதிரை

எனப் பாவித்துச் சிறுவன் அதில் சவாரி செய்யும் பொழுது அக்குச்சி அவனுக்குக் குதிரை போன்றே ஆகிவிடுகிறது. இம்மாதிரி சிறுவருடைய உள்ளத்தில் எழும் எண்ணங்கள் வேருனவை என்பதை நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அந்த எண்ணங்கள் நமது எண்ணங் களுடன் பொருந்தவில்லையே என்பதற்காக அவற்றை அலட்சியம் செய்யலாகாது. குழந்தை எப்பொழுதுமே குச்சியைக் குதிரையாகப் பாவித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல; வயசாக ஆகக் குழந்தை அவ்வாறு எண்ணிக்கொண்டு இருக்காது. நான் இங்கு எடுத்துக் காட்ட விரும்புவதென்னவென்ருல் சிறுவனின் மனப் போக்கு வேருக இருப்பதால் அதைக் கட்டுப்படுத்தி அடக்கக்கூடாது என்பதுதான். சிறுவனின் மனப்போக்கு அவனுடைய வயசின் இயல்புக்குத் தக்கவாறு சுயேச்சை யாக வளர்ந்து வந்தால்தான் பெரியவளுகின்ற காலத்தில் பூரணமலர்ச்சி அடையமுடியும்.

சாதாரணமாக மனிதன் சமூகத்தையும் சூழ்நிலையை யும் அனுசரித்துத் தனது வாழ்க்கையை அமைத்துக்கொள் கின்ருன். ஓரளவிற்கு அவற்றைத் தன் இஷ்டப்படி மாற்றி அமைக்கவும் முயல்கின்ருன். பெரும்பாலோர் சமூகத்தை அனுசரித்தே நடந்து கொள்வார்கள். ஆனுல் உறுதியான எண்ணங்களுடைய சிலர் சமூகத்தைத் தமது எண்ணங்களுக்கேற்ப மாற்றி அமைக்க முயலுகிருர்கள். அவர்களுடைய எண்ணங்கள் உயர்ந்தவையாக இருந்தால், அவை சமூகத்தின் முன்னேற்றத்திற்கே காரணமாய் விடுகின்றன. அப்படிப்பட்ட சிந்தனையாளர்களால் உலகம் நன்மையடைகின்றது. சிந்தனு சக்தியை இளம்பிராயம் முதற்கொண்டே தடை செய்யாது மலரும்படி செய்வதா லேயே இது சாத்தியமாகின்றது.

ஆனுல் எல்லோரும் சமூகத்தையே மாற்றியமைக்கக் கூடிய சிந்தனையாளர் ஆகிவிட முடியாது. இருந்தாலும்

சொந்த எண்ணங்களுக்கும், ஆலோசனைகளுக்கும் மரியாதை கொடுத்துச் சிறுவர்களை வளர்த்தால் அவர்கள் பிற்காலத்திலே கண்மூடித்தனமாக எதையும் நம்பிக்கொண்டு காரியம் செய்யாமலிருப்பார்கள். கவி ரவீந்திரநாத தாகூர் சொல்லுகிறார்:—'சிந்தனா சக்தியானது பழைய மூடப் பழக்க வழக்கங்கள் என்னும் பாலைவனத்திலே மறைந்து விடாது மேலோங்கி நிற்கும் உலகம் வேண்டும்' என்று. பரம்பரைப் பழக்கங்கள் நல்லதானாலும் சரி, கெட்டதானாலும் சரி நம்மை இறுகப் பிடித்துக் கொள்கின்றன. அவற்றையெல்லாம் நமது அறிவைக் கொண்டு அலசிப் பார்த்துப் பயனுள்ளவைகளை வைத்துக் கொண்டு மற்றவைகளைக் களைந்தெறியும் துணிவு நமக்கு உண்டாக வேண்டும். அவ்வாறுண்டாக வேண்டுமானால் சுயேச்சையாக எண்ணிப் பார்க்கும் பயிற்சி சிறு வயது முதற்கொண்டே போற்றி ஆதரிக்கப்படவேண்டும்.

மேலும் வாழ்க்கையிலே மனிதனுக்குப் பல பிரச்னைகள் உண்டாகின்றன; பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன. அப்பொழுதெல்லாம் அவன் தானாகக் காரியம் செய்ய வேண்டும். அவனுடைய ஆலோசனையைப் பொறுத்துத் தான் அவனுக்கு வாழ்க்கையில் வெற்றியோ தோல்வியோ இருக்கின்றது. பெரியவனானவுடன் திடீரென்று இந்த ஆலோசனைத் திறமையும், தனது ஆலோசனையிலே நம்பிக்கையும் உண்டாகிவிடுமா? முடியாது. சிறு வயதிலிருந்தே அந்தச் சக்தி தடங்கலில்லாது மலர்ந்து வரவேண்டும் என்பது இதனாலும் விளங்குகிறதல்லவா?

இன்று உலகத்திலே பெரும்பாலான மக்கள் சொந்தமாகத் தாங்களே ஒரு விஷயத்தைப் பற்றி எண்ணமிட்டு முடிவுக்கு வர நினைப்பதில்லை. வேறு யாராவது ஒருவர் அதைப் பற்றிச் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். ஏனென்றால் சிந்தனை

செய்வதற்குச் சிரமம் எடுத்துக் கொண்டாலும் திடீரென்று அந்தப் பழக்கம் ஏற்பட்டு விடுவதில்லை. அதனால் அவர்கள் தங்களுக்கு நம்பிக்கையுள்ள ஒருவன் அதைச் செய்யட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். இந்த மனப்பான்மையை உபயோகித்துக் கொண்டுதான் சில புதிய அரசியலமைப்புகள் உலகத்திலேயே ஏற்படலாயின. சர்வாதிகார நாடுகளிலே சுயேச்சையாக எண்ணமிடுவதையே ஆதரிப்பதில்லை. குழந்தைகளும் ஒரு குறுகிய வழியிலேயே எண்ணமிடுமாறு அவர்களுடைய மனப்போக்கைக் கட்டுப்படுத்தி வளர்க்கப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு வேறுவிதமாக எண்ணிப்பார்க்கும் ஆற்றல் குறைந்து விடுகிறது. அதிகாரத்தில் உள்ளவர்கள் கூறுவதே சரியானது என்றும் படுகிறது.

இம்மாதிரி மனப்பான்மை ஆட்சி புரிபவர்களுக்கு அனுகூலமென்றாலும், நாட்டிற்கோ உலகத்திற்கோ நன்மை பயக்காது என்பதை நாம் இன்று நிதரிசனமாகக் கண்டு கொண்டோம். ஆதலினாலே சிந்தனா சக்தி தாராளமாக வளரும்படி சிறுவர்களை வளர்த்து, அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தமது எண்ணத்தால் சோதித்துப் பார்க்கும் படியான மனப்பான்மை உடையவர்களாக ஆக்க வேண்டும்.

குழந்தையின் மனப்போக்கு செம்மையாக அமைவதற்குப் பெற்றோர்கள் உதவவேண்டும். குழந்தை சுயேச்சையாக எண்ணமிடுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். சிறுவர்களின் சிந்தனா சக்தியை விகசிக்கச் செய்வதில் பள்ளிக்கூடங்களுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. இந்தத் திறமையை வளர்க்கும் அளவிற்குத்தான் முக்கியமாகக் கல்வியின் பயன் இருக்கின்றது. ஆனால் இன்று புத்தகங்களிலுள்ள அறிவையும் எண்ணங்களையும் சிறுவர்களுடைய மனத்தில் புகுத்துவதே கல்வியாகக் கருதப்படுகின்றது. சிறுவனுக்

குத் தானாகவே எண்ணிப் பார்த்து முடிவுக்கு வரும் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். எல்லா விஷயங்களையும் ஆசிரியர்களே கூறிவிடுவது சரியான முறையல்ல. மாணவன் தனது ஆலோசனையால் உண்மையைக் கண்டுபிடிக்க முயன்றால் அதனால் அவனுடைய மனத்திறமை வளர்வதோடு, தெரிந்து கொண்ட விஷயமும் உள்ளத்தில் ஊன்றிப் பதிந்து விடுகிறது.

பள்ளிகளில் நடைபெறும் கொண்டாட்டங்கள், பந்தய விளையாட்டுக்கள், நாடகங்கள் முதலியவற்றிற்கு அவசியமான திட்டங்களைச் சிறுவர்களே வகுத்துக் கொள்ளவும், அவர்கள் எண்ணப்படியே நடத்தவும் விட்டு விடவேண்டும். ஒரு காரியத்தைப் பொறுப்பேற்று நிர்வகிக்க நேரிடும்போதுதான் அதைப் பற்றித் தீவிரமான ஆலோசனையும் பிறக்கின்றது. ஆசிரியர்கள் அவர்களுக்கு ஆங்காங்கு உதவி புரிபவர்களாகப் பின்னணியிலேயே இருந்து விடலாம். சிறுவர்கள் தவறு செய்தாலும் அதை அடிக்கடி சுட்டிக் காண்பித்து, அவர்களுக்குத் தங்களிடத்திலேயே நம்பிக்கையில்லாமற் போகும்படி செய்யக்கூடாது. அவர்களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் உண்டாகுமாறு தைரியம் சொல்லி உதவவேண்டும்.

வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கின்றபோதும் சிறுவனுடைய சிந்தனா சக்தியை வளர்ப்பதிலேயே ஆசிரியர் நோக்கங் கொண்டிருக்க வேண்டும். பௌதிக சம்பந்தமான ஒரு உண்மையைப் பற்றிப் போதிக்கின்ற காலத்தில் அதை எடுத்தவுடனே கூறிவிடாமல், மாணவனே கண்டு பிடிக்கும்படியாகச் செய்யலாம். ஒரு கணக்குச் செய்கின்ற போது சந்தேகமேற்பட்டால் அதை ஆசிரியரே நிவர்த்தி செய்துவிடாமல், மாணவன் தனது ஆலோசனையாலேயே நிவர்த்தி செய்துகொள்ள உதவலாம். இம்மாதிரி சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. அவற்றை நன்கு பயன்படுத்திச்

சிறுவனுடைய மனத் திறனை மேலோங்கச் செய்யலாம். பல உண்மைகளை ஆசிரியரோ புத்தகமோ எடுத்துரைப்பதும் அவற்றை ஏற்றுக்கொள்வதுந்தான் கல்வி என்ற எண்ணம் தவறானது. உண்மைக் கல்வியானது வாழ்க்கையில் எதிர்ப் படுகின்ற பிரச்னைகளைச் சமாளித்துக் கொண்டு வெற்றி பெறும்படியாக எண்ணமிடும் திறமையை வளர்ப்பதாக இருக்கவேண்டும். சுருக்கமாகக் கூறினால் பரீட்சையில் வெற்றிபெறச் செய்வது மட்டும் உண்மைக் கல்வியல்ல; வாழ்க்கைப் பரீட்சையிலும் வெற்றி பெறச் செய்வதே உண்மைக் கல்வி.

அவ்வாறு வெற்றி பெறுவதற்குச் சிறுவர்களுடைய சிந்தனா சக்தி நன்கு மலரும்படி செய்யவேண்டும். அதற்குச் சிறுவர்களுடைய மனப்போக்கை அன்போடும், அனுதாபத்தோடும் அறிந்துகொண்டு அதைச் சுயேச்சையாக வளரும்படி செய்வதே சிறந்த வழியாகும்.

# 7. அடிக்கலாமா?

'அடியாத பிள்ளை படியாது' என்று எப்படியோ ஒரு பழமொழி தமிழிலே தவருகத் தோன்றிவிட்டது. பலர் இதை வேத வாக்காக மதிக்கிருர்கள். இதை முழு மனத் தோடு பின்பற்றிஞல்தான் குழந்தைகளை நன்கு வளர்க்க முடியும் என்றும் நம்புகிருர்கள்.

"கையில் அடிக்காதே; குழந்தை மந்தியாய்ப் போய் விடும்; ஒரு சின்ன மிளார் வைத்துக்கொண்டு சுருக்கென்று அடி கொடுக்க வேண்டும்" என்று சிலர் போதனை செய் வதை நான் கேட்டிருக்கிறேன்.

ஒரு சமயம் நான் ரெயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது ஒரு ரசமான சம்பாஷணை என் காதில் விழுந்தது.

வீட்டை விட்டு ஓடிப்போன தன் மகனைத் தேடிக் கொண்டு ஒருவர் புறப்பட்டிருக்கிருர். அவர் அதைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் பையனுக்கு மிகவும் செல்லம் கொடுத் திருப்பீர்கள். அதனுல்தான் அவன் யாருக்கும் அடங்கா மல் ஓடியிருக்கிருன்" என்ருர் ஒரு பிரயாணி.

"அடித்து மிரட்டி வைத்திருந்தால் இப்படி ஓடுவாஞ?" என்று கேள்வி போட்டார் மற்ருெருவர்.

"நான் அடிக்காத அடியா? எத்தனை தடவை அடித் திருக்கிறேன்! ஒவ்வொரு நாளைக்குப் பிரம்பை எடுத்தால் உரித்துப் போடுவேன்" என்ருர் காணுமற்போன பைய னுடைய தகப்பனுர்.

"குழந்தையிலிருந்தே அடித்து மிரட்டி வைக்க வேணும். அப்போது செல்லம் கொடுத்துவிட்டுக் கொஞ்சம் பெரியவனான பிறகு அடித்தால் இப்படித்தான் ஓடுவான்" என்று காரணங் கண்டுபிடித்தார் வேறொரு பிரயாணி.

"அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டான்" என்று இன்னொருவர் பழமொழியில் பேசினார்.

அவர்கள் பேச்சைக் கேட்கக் கேட்க என்னையறியாது எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. பலர் இவர்களைப் போலத்தான் பொதுவாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அடித்து வளர்க்காத பிள்ளையும் பிடித்து வளர்க்காத மீசையும் உருப்படாவாம்.

பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகளிடத்தில் அளவுகடந்த பிரியம் இருக்கிறது. இருந்தாலும் குழந்தைகளை அடிக்கிறார்கள். அப்படிச் செய்தால்தான் குழந்தைகள் திருந்தி, நல்ல வழியில் நடக்கக் கற்றுக்கொள்ளும் என்பது அவர்களுடைய எண்ணம். இது முற்றிலும் சரியல்ல. நல்ல முறையில் வளர்ப்பதற்குக் குழந்தையை அடிக்க வேண்டிய அவசியமில்லை. அடிப்பதனாலும் மிரட்டுவதனாலும் குழந்தைக்கு நன்மையை விடத் தீமையே அதிகம் விளைகின்றது என்று குழந்தையின் மனத்தை ஆராய்ந்தறிந்த மனத் தத்துவர்கள் கூறுகிறார்கள்.

"சில சமயங்களிலே குழந்தைகள் பிடிவாதம் செய்கின்றனவே, அப்பொழுது அடிக்காமல் என்ன செய்வது? எவ்வளவு அன்பாகவும் பொறுமையாகவும் பேசினாலும் கேட்பதில்லை. அந்தச் சமயத்திலே என்ன செய்வது?" என்று சில பெற்றோர்கள் கேட்கிறார்கள்.

"வாயில் சொல்லிவிட்டுப் போகிறவர்களுக்கென்ன? குழந்தையை வளர்த்துப் பார்த்தால் கஷ்டம் தெரியும். என்

மகன் ராமு இருக்கிறானே, அவன் ஒவ்வொரு நாளைக்கு எதையாவது வேண்டுமென்று ஒரே கத்துக் கத்துவான். கீழே விழுந்து புரளுவான். இரண்டடி கொடுத்தால்தான் அடங்குவான். அவனை அடிக்காமல் என்ன செய்ய முடியும்?" என்று ஒரு தாய் என்னைக் கேட்டாள்.

ஆரம்பத்திலிருந்தே குழந்தையை நல்ல முறையில் வளர்த்து வந்தால் இப்படி அடிக்க வேண்டி நேராது. அன்போடு வார்த்தை சொல்லுவதாலும், நம்முடைய நடத்தையின் உதாரணத்தாலுமே குழந்தையைச் சரியான வழியில் நடக்கும்படி செய்துவிடலாம். சில சமயங்களிலே குழந்தைக்கு அதன் நடத்தை சரியில்லை என்பதை நமது முகக் குறிப்பாலேயே உணர்த்திவிடலாம். சாதாரணமாகக் குழந்தை மற்றவர்களுக்கு விருப்பமில்லாததைச் செய்யாது. மற்றவர்கள் தனது செய்கைகளைப் பாராட்டிப் போற்ற வேண்டுமென்று குழந்தைக்கு ஆசை. பெற்றோர்கள் வெறுக்கிறார்கள் என்றால் அம்மாதிரியான காரியத்தை விலக்கிவிடக் குழந்தை முயலும். ஆனால், அதற்கு முதலிலிருந்தே பெற்றோர்கள் ஜாக்கிரதையாகக் குழந்தையை நல்ல முறையில் வளர்த்துவர வேண்டும். அடிப்பதனால் குழந்தையின் மறைமனத்திலே பல கோளாறுகள் ஏற்பட்டு அதன் பிற்கால வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்று மனத் தத்துவர்கள் கூறுகிறார்கள். அதனால் குழந்தையை அடிக்கவே கூடாது என்கிறார்கள் அவர்கள். ஒரு சிலர் எப்பொழுதாவது வேறு வழியொன்றும் தோன்றாத காலத்தில் குழந்தையை அடிக்கலாம் என்று ஒரு விதி விலக்கும் கூறுகிறார்கள். ஆனால், வெறும் கோபத்தாலோ வெறுப்பாலோ மட்டும் அடிக்கப்படாது என்றும், குழந்தையைத் திருத்துவதற்காக அதன் குற்றத்தை எடுத்துக்காட்டும் முறையில் அமைதியான மனநிலையோடு அடிக்க வேண்டும் என்றும் அவர்கள் வரம்பு கட்டியிருக்கிறார்கள்.

பொதுவாகக் கோபத்தினல்தான் குழந்தையை அடிக்கிருேம். அடி படுகின்றபோது, "பெரியவர்களாக இருப்பதால்தான் அவர்கள் என்னை அடிக்கிருர்கள்" என்று குழந்தையின் மனத்தில் எண்ணம் உதயமாகுமாம். அந்த எண்ணம் வெறுப்புணர்ச்சிக்குக் காரணமாகிவிடும்.

சில பெற்ருேர்கள் மித மிஞ்சிய அன்பு காட்டுவார்கள்; கோபம் வந்துவிட்டால் அளவுக்கு மிஞ்சிக் கடுமையாக இருப்பார்கள். இரண்டும் தவறு. அன்பு கொஞ்சம் அதிகமாகவே இருப்பதால் தீங்கில்லை. ஆனல், கண்டிப்பும், மிரட்டலும் அதிகமாக இருக்கக்கூடாது. குழந்தையின் மனத்திலே வெறுப்புணர்ச்சி முதலிய விரும்பத் தகாத உணர்ச்சிகள் தோன்றுவதற்கு அது காரணமாக இருக்கும்.

குழந்தை நமது அன்புக்குப் பாத்திரமானது; புதிதாக மலர்ந்த பூவைப் போன்றது. அதை அடிக்கக் கூடாது. அது அன்பிலேதான் முழு மலர்ச்சி பெறும்.

# 8. பயப்படுத்தலாமா?

ஒரு நாள் நான் ரெயிலிலே பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். ஒருவர் தம் குடும்பத்தோடு அதே வண்டியில் வந்தார். அவருடைய சின்னக் குழந்தை ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க வேண்டுமென்று ஒரே பிடிவாதமாகத் தொந்தரவு செய்து கொண்டிருந்தது. "ஐயோ! வேண்டாம். கீழே விழுந்துவிடுவாய்! வெளியே பார்க்கப்படாது" என்று குழந்தையின் பாட்டி பயங்காட்டி எச்சரிக்கை செய்தாள். அதனால் கொஞ்ச நேரம் குழந்தை பேசாதிருந்தது. பிறகு மறுபடியும் அது தலையை நீட்ட யத்தனித்தது. "ஐயோ, குழந்தை போச்சு" என்று தாய் வீறிட்டுக் கத்தினாள். "இன்னும் கொஞ்ச நேரம் பார்க்காமலிருந்தால் என்ன ஆகியிருக்குமோ?" என்று பாட்டி அலறினாள். அவள் அதோடு நிற்கவில்லை. குழந்தையை மிரட்டி வைப்பதற்கு ஒரு புதிய வழியையும் கண்டு பிடித்தாள். எதிர்ப் பக்கத்திலே உட்கார்ந்திருந்த ஒருவரைக் காண்பித்து, "உஸ், அதோ பார், அவர் உன்னைப் பிடித்துக் கொண்டு போய் விடுவார் - பேசாமல் என் மடிமேல் வந்துவிடு" என்று சொன்னாள். அந்த ஆசாமியும் பாட்டிக்குத் துணையாக வந்துவிட்டார். "டேய் - பேசாமே உட்கார். இல்லாத போனால் இந்தப்பைக்குள்ளே பிடித்துப் போட்டுக்கொண்டு போய்விடுவேன்" என்று சத்தம் போட்டார். கண்ணைத் திரு திருவென்று விழித்தார். குழந்தை பயந்து அரண்டுபோய்விட்டது. பேசாமல் பாட்டியின் மடியில் அமர்ந்துகொண்டது.

பாட்டியின் தந்திரம் பலித்துவிட்டது. ஆனால் அதனால் குழந்தைக்கு எவ்வளவு தீங்கு விளைகிறதென்பதை அவள் உணருவதில்லை. இந்தச் சம்பவத்தைக் கண்ணுற்ற எனக்கு மனத்திலே அதிக வேதனை யுண்டாயிற்று. எதிர்

கால இந்தியாவில் வாழப்போகிற மக்களை இப்படிப் பய முறுத்திக் கோழைகளாக்குவது நியாயமா என்ற கேள்வி என் மனத்திலே வெடித்தெழுந்தது.

சின்னக் குழந்தைகளுக்கு எதைக் கண்டாலும் ஆச்சரியம். எதையும் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று மட்டில்லாத ஆசை. அந்த ஆசை போற்றத் தகுந்தது. புதிது புதிதாக எல்லாவற்றையும் பார்த்து அந்த அநுபவத்தால் குழந்தைகள் தங்கள் அறிவை விருத்தி செய்து கொள்ளுகின்றன. அந்த ஆசையை இப்படி நசுக்கி விடுவது நல்லதா என்று நான் யோசித்தேன். அது மட்டுமல்ல. இம்மாதிரி பயப்படுத்தி வைத்தால் அவன் பெரியவனுனபொழுது வாழ்க்கையில் நேரிடுகின்ற கஷ்டங்களைச் சமாளிக்க எப்படித் தைரியமடையப் போகிறுன்? எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும் என்ற மனேதிடம் எப்படி உண்டாகப் போகிறது? புதிய மனிதர்களைக் காட்டி அவர்களை ராட்சசர்கள் என்று எண்ணும்படி செய்தால் அவன் எவ்வாறு பின்னுல் சமூகத்தில் மற்றவர்களோடு சமமாக இருந்து பழகப்போகிறுன்? இம்மாதிரி கேள்விகள் என் மனதில் தொடர்ந்து தோன்றின.

இப்படிக் கூறுவதால் குழந்தைகளுக்கு ஏதாவது திங்கு நேரிட்டாலும் சரியென்று அவற்றின் இஷ்டப்படியெல்லாம் விட்டுவிடலாம் என்று நான் சொல்லுவதாக நினைக்கக் கூடாது. இளங்கன்று பயமறியாது என்பது வாஸ்தவந்தான். ஆனுல் குழந்தைக்குப் பயத்தை உண்டாக்காமலேயே இம்மாதிரி சந்தர்ப்பங்களில் சமாளித்துவிட முடியும் என்பது எனது கட்சி. நாம் மட்டும் கொஞ்சம் கவனமாக இருந்தால் போதும். ரெயில் ஜன்னல் வழியாகக் குழந்தை பார்க்க விரும்பினுல் அதைத் தடுக்க வேண்டியதில்லை. குழந்தையைப் பார்க்கும்படி விட்டுவிட்டுப் பின்புறம் மெதுவாகப் பிடித்துக்கொள்ளலாம். குழந்தைக்காக நாம் கொஞ்சம் சிரமப்படத்தான் வேண்டும்.

குழந்தை இந்த உலகத்திற்கு வந்து சில வருஷங்கள் தாஞ்கின்றன. அதற்கு இங்குள்ள பொருள்களெல்லாம் புதியவை. அவற்றை யெல்லாம் பார்க்க அதற்கு அளவு கடந்த ஆசை. அந்த ஆசையைக் கூடியவரை நாம் பூர்த்தி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அதன் அறிவு நன்ருக விரிவடையும். ஆராய்ச்சி மனப்பான்மை குழந்தைக்கு உண்டு. அதை வளர்க்க நாம் உதவ வேண்டும்.

பிறந்தது முதற்கொண்டே பய உணர்ச்சியைப் பல வகைகளில் நாம் குழந்தைக்கு உண்டாக்கி விடுகிருேம். இருட்டறையில் குழந்தை தூங்கக் கூடாது என்கிருேம். இருட்டிலே போகக் கூடாது என்று தடுத்து விடுகிருேம். குழந்தை தூங்காமல் தொந்தரவு கொடுத்தால், "உஸ்—உஸ்! அதோ பூனே வருகிறது" என்று பயமுறுத்தி 'மியாவ் மியாவ்' என்று சத்தமும் போடுகிருேம். இல்லாவிட்டால், "அதோ இரண்டு கண்ணன் வருகிருன், அதோ போலீஸ் காரன் வருகிருன், உன்னேப் பிடித்துக் கொண்டு போய் விடுவான். கண்ணே மூடிப் படுத்துக் கொள்" என்று மிரட்டுகிருேம்.

இப்படிப் பல வழிகளில் நாம் குழந்தைகளேப் பயங் கொள்ளிகளாகச் செய்துவிடுகிருேம். இது மிகப் பெரிய தவறு. குழந்தைக்குப் பெரியதோர் பாதகம். வாழ்க்கையில் அவன் தைரியமாக முன்னேக்கிச் செல்ல வேண்டாமா? அதற்குத் தேவையான அஞ்சா நெஞ்சத்தைக் குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்க்கவேண்டாமா? உருவத்திலே மட்டும் குழந்தை வளர்ந்தால் போதுமா? அதன் மனத்திடமும், துணிச்சல் தன்மையும் வளர வேண்டாமா? இவை யெல்லாம் சரியானபடி வளர்ந்தால்தான் அவன் வாழ்க்கையில் வெற்றியுடன் முன்னேற முடியும்.

இயல்பாகக் குழந்தைக்கு இரண்டு விதமான பயந்தான் உண்டு. பெரிய சப்தத்தைக் கேட்டால் அது பயப்படும். மேலேயிருந்து கீழே திடீரென்று விழுவது போன்ற

உணர்ச்சி ஏற்பட்டால் அது பயப்படும். மற்றப் பயங்க ளெல்லாம் நாம் உண்டாக்கியவை என்று டாக்டர் வாட்சன் போன்ற மனத் தத்துவர்கள் கூறுகிறார்கள். ஆதலால் நாம் மட்டும் கொஞ்சம் கவனமாக இருந்தால் குழந்தையைப் பய மறியாமல் வளர்க்க முடியும். துணிச்சலாகக் காரியங்கள் செய்யவும் பழக்கலாம். ஏதாவது ஒன்று குழந்தைக்கு நிச்சய மாகப் பெரிய அபாயத்தை உண்டாக்கும் என்று தோன்றி னால் அதை மட்டும் முன்கூட்டியே அகற்றிவிட வேண்டும். மற்றபடி குழந்தையைத் தாராளமாக விட்டுவிட வேண் டும். நான் ஒரு நாள் கடற்கரையில் உலாவிக்கொண்டிருக் கும்போது ஓர் ஐரோப்பியச் சிறுவன் கடலில் குதிப்பதைப் பார்த்தேன். அவனுக்கு ஐந்தாறு வயதிற்கு மேலிராது. அதிகமாக உள்ளே செல்லாமல் கரை அருகிலேயே இருந்து அவன் அலைகள் வரும்போது முழுகிக் கொண்டிருந்தான். அவனுடைய தந்தை பக்கத்திலே நின்று கவனித்துக் கொண்டிருந்தார். இம்மாதிரி பழக்குவது நல்லது.

ஓடி விளையாடினால் கீழே விழுந்து காயமாகி விடுமே, குதித்தால் கால் ஒடிந்து போகுமே என்று எதற்கெடுத் தாலும் ஓர் அபாயம் கற்பித்துக்கொண்டு குழந்தையைத் தடுப்பது அறிவுடைமையல்ல. வீரக் கதைகளைக் கூறிச் சிவாஜியின் தாய் அவரைச் சிறுவயதில் வளர்த்ததாகச் சரித் திரம் கூறுகின்றது. பயத்தை அகற்றுவதோடு தைரியமாகக் காரியங்கள் செய்யவும் நாம் குழந்தைக்கு உற்சாகமளிக்க வேண்டும். பயமென்பது மிக மோசமான உணர்ச்சி. அதை அதிகமாக உடையவர்கள் வாழ்க்கையில் எந்தத்துறையிலும் வெற்றியடைய முடியாது. வாழ்க்கையில் வெற்றி வேண்டு மானால் மனோபலம் வேண்டும்; தைரியம் வேண்டும்; எதை யும் செய்து சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் துணிச் சலும் வேண்டும். அவற்றையெல்லாம் குழந்தைப் பருவத்தி லிருந்தே வளர்க்க உதவ வேண்டியது பெற்றோர்களின் முக்கியக் கடமையாகும்.

# 9. குழந்தைச் சித்திரம்

சித்திரம் வரைவதிலே சின்னக் குழந்தைகளுக்கு அள வில்லாத பிரியம். வர்ணப் பென்சிலோ, வர்ணக்கட்டியோ கிடைத்துவிட்டால் அவைகளுக்கு உண்டாகும் ஆனந்தம் சொல்லி முடியாது. அடுப்புக்கரி ஒன்று கிடைத்து விட் டாலும் போதும்; வீடு முழுதும் சித்திரம் போடத் தொடங்கி விடுவார்கள். சுவரெல்லாம் கெட்டு விடுகிறதே என்று தாய்க்குக் கோபங்கூட வரும்.

பிறவியிலேயே ஒவ்வொரு குழந்தையும் ஓர் ஓவியன் தான்; ஆனால் பதின்மூன்று பதினான்கு வயதாகும் போது எல்லாக் குழந்தைகளும் ஓவியர்களாக இருப்பதில்லை. அப் பொழுது அவர்களில் ஒரு சிலரே உலகம் ஏற்றுக் கொள்ளுகிற முறையில் ஓவியர்களாக இருக்கமுடியும்.

ஓவியக் கலையில் பிற்காலத்தில் சிறந்தோங்க வேண்டும் என்பதற்காகவே குழந்தைக்குச் சித்திரம் எழுதச் சந் தர்ப்பம் அளிக்கவேண்டுமென்பதில்லை. சின்னக்குழந்தை யின் மனத்திலே எத்தனையோ உணர்ச்சிகள், எண்ணங்கள் எழுகின்றன. அவற்றையெல்லாம் பேச்சிலே வெளிப் படுத்த அதற்குத் தெரியாது. சின்னக் குழந்தைக்கு நன்றாகப் பேச வராது. இருந்தாலும் அதற்குத் தனது உணர்ச்சிகளை வெளியிட ஆசை. அந்த நிலைமையிலே அது தன் உணர்ச்சிகளைப் படங்களாக எழுதிக்காட்ட முயன்றால் அது நல்லதுதானே? சித்திரமே அதற்கு அப் பொழுது உணர்ச்சிகளை வெளியிடும் பாஷை. பேசும் திறமை வளர வளரச் சித்திரம் வரையும் திறமை குறைந்து கொண்டே போகிறது. அதனால் தான், "மொழியானது

முதலில் சித்திரத்தைக் கெடுத்தது; பிறகு ஒரே அடியாக அதை விழுங்கிவிட்டது'' என்று ஒரு மனத்தத்துவர் கூறுகிறார்.

பேசும் மொழி வளராத ஆதிக் காலத்தில் மனிதன் தனது உணர்ச்சிகளைச் சித்திரங்களின் மூலமாகவே வெளியிட்டான். கண்டு பிடிக்கப்பட்டுள்ள குகைச் சித்திரங்கள் இதற்குச் சான்றாக உள்ளன. அந்த ஆதி மனிதனுடைய நிலையில் குழந்தை இருக்கிறது.

மூன்று வயதுக் குழந்தையிடம் ஒரு சுண்ணாம்புக் கட்டியைக் கொடுத்து விட்டால் அது உடனே என்னவோ வரைய ஆரம்பித்து விடுகிறது. ஐந்து வயது, எட்டு வயது, பத்து வயதுச் சிறுவர் சிறுமிகளுக்கு நல்ல வர்ணங்கள் கிடைத்து விட்டால் ஒரே உற்சாகந்தான்.

நான்கு ஐந்து வயதான பிறகும் குழந்தை தன் உணர்ச்சிகளைப் படங்களின் மூலமாகத்தான் நன்றாக வெளிப்படுத்துகிறது. அதன் கற்பனை சக்தி எவ்வாறு வேலை செய்கிறது என்பதை அவர்கள் வரையும் படங்கள் மூலமாகத்தான் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால் குழந்தைச் சித்திரமே ஒரு தனிப்பட்ட பாஷை. அதைப் புரிந்து கொள்ளுவதற்கு நல்ல பயிற்சி வேண்டும்.

அடுத்த பக்கத்திலே பூஞ்செடியின் படம் ஒன்று இருக்கிறது. ஏழு வயதுள்ள சிறுவன் வரைந்தது அது. ''செடியை விடப் பூப் பெரிதாக இருக்கிறதே?'' என்று கேட்டு நீங்கள் சிரிக்கலாம். ஆனால் பூவைப் பெரிதாக வரைந்திருப்பதன் பொருள் வேறு. அந்தச் செடியில் நிறையப் பூக்கள் இருக்கின்றனவாம். பூமயமாகச் செடி விளங்குவதைக் கண்டு அந்தப் பூவையே பிரதானமாகக் காட்டிச் சிறுவன் படம் தீட்டியிருக்கிறான். ஒரு மரத்திலே

பல குருவிகள் அமர்ந்திருப்பதைக் குறிப்பிட வேண்டுமானால் குழந்தை சாதாரணமாக ஒன்றிரண்டு குருவிகளை மிகப் பெரியதாக மரத்தின் மேலே வரைந்து காண்பிக் கிறது.





இரண்டு வயதுக் குழந்தையிடம் ஒரு சிவப்பு வர்ணச் சுண்ணாம்புக் கோலைக் கொடுத்தேன். அது என்னவோ கோடுகள் மேலிருந்து கீழே தரையில் வரைய ஆரம்பித்தது. கிறுக்குவது போலத்தான் முதலில் தோன்றியது. இதுதான் குழந்தையின் முதற் சித்திரம். வரைய வரையக் குழந்தை அதற்கு ஒரு பொருள் கண்டு பிடிக்கத் தொடங்குகிறது.

இவ்வாறு கிறுக்குவதற்குக் குழந்தைக்குத் தாராளமாக வசதி அளிக்கவேண்டும். ஒன்றரை வயது முதல் இரண்டு வயது வரை குழந்தைகள் இவ்வாறு கிறுக்கி மகிழ்கின்றன. குழந்தைகளின் வளர்ச்சிக்கு இது உதவுகின்றது.

கிறுக்கல் சித்திரத்திலிருந்து அடுத்தபடியாக ஒரு வகை ஒழுங்குக்குட்பட்ட சித்திரம் தோன்றுகிறது. ஒழுங்கு என்றால் தேர்ந்த ஓவியர்களின் படத்திலுள்ள ஒழுங்கல்ல. குழந்தைச் சித்திரத்திற்கே இயல்பாயுள்ள ஒரு ஒழுங்கு. இந்த ஒழுங்கைச் சந்தம் (Rhythm) என்று கூறலாம். கவிதையிலும் பாட்டிலும் ஏதாவது ஒரு சந்தம் திரும்பத் திரும்பி வரும். கோடுகள், வளைவுகள் முதலியவை உள்ள சித்திரங்களையே சந்தம் உள்ளவை என்றுகுறிப்பிடுகிறேன்.


பகலும் இரவும் மாறிமாறி வருகிறது. அதில் ஒரு சந்தம் இருக்கிறது. மூச்சு விடுவதில் ஒரு சந்தம் இருக்கிறது. இசை, நாட்டியம் முதலிய கலைகளிலே சந்தம் உயிர் நாடி. இது போன்ற சந்தம் குழந்தையின் சித்திரங்களிலே வெளிப்படுகிறது. பசுமாட்டிற்குக் குழந்தை சில சமயங்களிலே எட்டுக் கால்கள் போடும். திரும்பத் திரும்பக் கால்களை வரைவதிலே அதற்கு ஒரு தனிப்பட்ட இன்பம்! இதை உணராது அந்தப் பசுவைப் பார்த்து நாம் சிரிப்பது சரியல்ல.


ஒரு நான்கு வயதுச் சிறுவன் கறுப்பு வர்ணத்தையே உபயோகித்து ஒரு படம் தீட்டிக்கொண்டிருந்தான். அது இன்னதென்று எனக்குப் புரியவே இல்லை. ஒரே கறுப்புப் பூச்சாக எனக்குத் தோன்றியது. ஆனால் நான் அதைப் பற்றி ஒன்றும் கூறாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறுவனே அதற்கு விளக்கம் கூறத் தொடங்கினான்: "இதோ பார்த்தியா—வீடு தீயிலே எரிஞ்சு போச்சு" என்று அவன் கூறினான். பெற்றோர்களிடம் விசாரிக்கும்போது சமீபத்திலே அந்த வீதியின் ஒரு முனையில் சில குடிசைகள் தீப்பிடித்து வெந்து போனதைப் பற்றியும், தீ யணைக்கும்

யந்திரங்கள் வந்து நெருப்பை அணைத்த விவரத்தையும், வேலைக்காரனோடு சென்று அதை அந்தச் சிறுவன் கண்டு வந்த செய்தியையும் எனக்கு எடுத்துச் சொன்னார்கள். எரிந்து போன குடிசைகளின் தோற்றம் அச்சிறுவனின் உள்ளத்திலே பதிந்திருக்கிறது. அது படமாக உருவெடுத்து விட்டது. இந்த விவரம் தெரிந்த பிறகு அவன் வரைந்த படத்தை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

சந்தச் சித்திரத்தைத் தொடர்ந்து குறியீட்டுச் சித்திரம் தோன்றுகிறது. குழந்தை பலவகையான சின்னங்களால் தனது எண்ணங்களைக் காட்ட முயல்கிறது.

சின்னக்குழந்தை ஆரம்பத்தில் இவ்வாறு கற்பனையாகவே சித்திரம் வரைகிறது. வயது ஆக ஆகத்தான் காணும் இயற்கைப் பொருள்களையும், உயிர்ப் பிராணிகளையும் வரைவதில் கவனம் செலுத்துகிறது. அப்பொழுது






நாய், பூனை முதலிய மிருகங்களையும் காக்கை, குருவி முதலிய பறவைகளையும் மனித உருவங்களையும், ரெயில், மோட்டார் முதலானவற்றையும் எழுதிக்காட்டக் குழந்தை ஆசைப்படுகிறது.

குழந்தைகளுக்குத் தொடக்கத்திலேயே நியமப்படி சித்திரம் வரையக் கற்றுக் கொடுக்க முயல்வது தவறாகும். வர்ணக்குச்சிகளை அல்லது பலவகை வர்ணங்களைக்கரைத்து

வைத்துள்ள கிண்ணங்களையும் ஒரு தூரிகையையும் அதனிடம் கொடுத்து விடவேண்டும். சாதாரணமான பூச்சு வர்ணங்களை நீரில் கரைத்துக் கொடுத்தால் அதுவே போதும். பெரிய அளவில் ஒரு காகிதத்தையும் கொடுத்து விட்டு நாம் விலகி விடவேண்டும். குழந்தை தன் உள்ளக் கிளர்ச்சிகளைச் சித்திரித்துக் காண்பிக்கப் போகிறது. அதிலே நாம் குறுக்கிடக் கூடாது.

முறைப்படி பயின்ற ஓவியர்களின் சித்திரங்களோடு குழந்தையின் சித்திரத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதும் தவறு. இரண்டும் வெவ்வேறான இலக்கண விதிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. குழந்தைச் சித்திரத்திற்கு நாம் வியாக்கியானம் செய்ய முயல்வதைவிடக் குழந்தையிடமிருந்தே அதைக் கேட்டுப் புரிந்து கொள்ளுவது நல்லது.



இதோ இந்தப் படத்திலே பாருங்கள். பறவையும் பாம்பும் பேசிக் கொண்டிருக்கின்றன. குழந்தைகளுடைய கற்பனையின்படி பறவைகளும் மற்ற உயிர்ப்பிராணிகளும் பேசும். பாம்புக்குக் கால்கள் ஏது என்று நீங்கள் கேட்பீர்கள். குழந்தையின் கற்பனையிலே அதற்கு நூற்றுக் கணக்கான கால்கள் உண்டு. காலில்லாமல் எப்படி அது நடக்க முடியும் என்பது குழந்தையின் கேள்வி!

சுருக்கமாகக் கூறினால் சித்திரம் என்பது குழந்தைகளுக்குத் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த

சாதனம். அது குழந்தையின் உள்ளத்தில் எழும் உணர்ச்சியின் வடிவம். சித்திரத்தின் மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் குழந்தைக்கு வசதி யளிப்பது நல்லது. அதன் கற்பனைத் திறன் விரிவடைவதோடு உள்ளத்திலே அமைதியை ஏற்படுத்தவும், கலைத்திறமை இயல்பாகவே அமைந்திருக்குமானல் அதை மலரச் செய்யவும் குழந்தைச் சித்திரம் உதவி செய்யும்.

# 10 ஒரே குழந்தை

உங்களுக்கு ஒரே குழந்தைதானா? அப்படியானால் அதை வளர்ப்பதில் நீங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உங்கள் அன்பை யெல்லாம் அதனிடம் காண்பிப்பீர்கள்—அதில் எனக்குச் சந்தேகமில்லை. உங்கள் கவனத்தை யெல்லாம் அதன் மேல் செலுத்துவீர்கள். அதிலும் எனக்குச் சந்தேகமில்லை. அவ்வன்பையும் கவனத்தையும் பற்றித்தான் நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அளவுக்கு மிஞ்சிய அன்பும் கவனமும் குழந்தைக்குக் கெடுதலாகவும் முடியலாம்.

ஒரே குழந்தை யென்றால் சாதாரணமாக அது பிடிவாத முள்ளதாக இருக்கிறது. தொட்டதற் கெல்லாம் ஒரே கூச்சலும் அழுகையும் தொடங்குகிறது. காரணமென்ன? பெற்றோர்களுக்கு அது செல்லப்பிள்ளை. அவர்களுக்கு அதுதான் ராஜா.

ஒற்றைக் குழந்தை தன்னந் தனியாக வளர்கிறது. அதற்குத் தன் வயதுள்ள குழந்தைகளோடு அதிகமான தொடர்பு இல்லை. அது வயது வந்தவர்களின் மத்தியிலே அவர்களுடைய காரியங்களைக் கவனித்துக் கொண்டு நிற்கிறது. இந்த வகையில் அதற்கு ஒரு பிரதிகூலம் உண்டு.

அது மற்றக் குழந்தைகளோடு கூடி விளையாடவேண்டும். தாராளமாக அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பது பெற்றோர்களின் தனிப்பட்ட கடமையாகும். பிறரோடு கூடியிருக்கப் பழகுவது குழந்தைப் பருவத்திலேயே கற்றுக் கொடுக்கவேண்டிய முக்கியப் படிப்பினையாகும்.

வயதில் ஒத்த குழந்தைகளின் சேர்க்கை யில்லாததால், பல தீங்குகள் விளைய இடமேற்படுகிறது. கூர்ந்த அறிவுள்ள குழந்தைகள் தாமே ஒரு கற்பனை உலகத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு அதில் தமது காலத்தைக் கழிக்கத் தொடங்கும். கற்பனை செய்வது எல்லாக் குழந்தைகளுக்கும் இயல்புதான். அதனால் தீங்கில்லை. ஆனால், அவை வெறுங் கற்பனைகள்தான் என்ற உணர்வு அவ்வப்போது ஏற்படவேண்டும். உண்மை இது, கற்பனை இது என்று பிரித்தறியக் குழந்தைக்கு ஆரம்பத்திலிருந்தே பயிற்சி வேண்டும்.

கற்பனையிலே—அதிலும் ஒற்றைக் குழந்தையின் கற்பனை உலகத்திலே—அக் குழந்தைதான் நடு நாயகமாக விளங்கும் தலைவன்; அது வைத்ததே சட்டம்; அதற்கு மாறு சொல்ல யாருமில்லை—இவ்வாறு கற்பனை செய்து கொண்டு வளர்ந்த குழந்தை பிறரோடு பழகநேரும்போதும், வாழ்க்கையில் சேர்ந்து வேலை செய்யும்போதும் தன்னிஷ்டப் படியே எல்லாம் நடக்க வேண்டுமென விரும்புகிறது. அது நடக்குமா? அந்தக் குழந்தைக்கு மற்றவர்களை அநுசரித்து நடக்கத் தெரிகிறதில்லை. அதனால் மனத்தாங்கல்களும் சச்சரவுகளும் விளைகின்றன. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் பல சமயங்களில் தடை ஏற்படுகிறது.

மற்றவர்களைச் சமமாகப் பாவித்து வாழ ஒவ்வொரு குழந்தையும் கற்றுக் கொள்ளவேண்டும். வீட்டிலே பல குழந்தைகள் இருந்தால் இப் படிப்பினை தானாகவே ஏற்பட்டுவிடுகிறது. ஒற்றைக் குழந்தைக்கு இந்த வாய்ப்பில்லை. மேலும், ஒவ்வொரு குழந்தைக்கும் சாதாரணமாக முதல் இரண்டு வருஷங்களுக்குப் பெற்றோர்களின் விசேஷக் கவனம் கிடைக்கிறது. ஆனால், ஒற்றைக் குழந்தைகளுக்குப் பல வருடங்களுக்கு அது கிடைக்கும். அதற்கு வேண்டிய தெல்லாம் பெற்றோர்கள் செய்வார்கள். அதனால்

அது எதற்கெடுத்தாலும் பிறரை எதிர்பார்க்கவே எண்ணம் கொள்கிறது; தானே அதைச் செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை அதற்கு ஏற்படுவதில்லை.

ஆதலால், மற்றக் குழந்தைகளோடு பழகுவதற்கு அதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். குழந்தைப் பள்ளிகள் இதற்குச் சிறந்த சாதனங்கள். அங்கே பெற்ரோர்களின் அர்த்தமற்ற அன்பும் செல்லமும் கவனமும் இல்லை. பிற குழந்தைகளின் சேர்க்கை நிறைய உண்டு. அவர்களோடு பல மணி நேரம் இருப்பதால் கூடிக் காரியம் செய்யவும், விளையாடவும், பிறரை அநுசரித்து நடக்கவும் அக்குழந்தை கற்றுக் கொள்ளும். உலகமானது தனது வீட்டைப் போலவே தன் விருப்பப்படி இருக்காதென்ற உணர்ச்சியும் மெதுவாக உண்டாகும்.

எதிர் வீட்டிலே ஒரு பையன் இருக்கிருன். ஒரே பையன். அவனுக்கு ஏதாவது வேண்டுமென்ருல் அம்மாளைக் கூப்பிடத்தான் தெரியும்; அம்மாள் வரக் கொஞ்சம் தாமத மேற்பட்டாலும் உடனே அழத்தான் தெரியும். அவனுக்கு வேண்டிய தெல்லாவற்றையும் அவனுடைய தாயே செய்துவிடுகிருள். அவன் ஓடக்கூடாது; ஓடினுல் விழுந்து காயமாகிவிடுமே! ஒவ்வொரு வேளையும் அவனைச் சாப்பிடும்படி செய்வது ஒரு பெரிய பிரயத்தனம். சரியானபடி உணவருந்தாது உடம்பு இளைத்துவிடுகிறதே என்று தாய்க்குப் பெரிய கவலை. அதை அவன் தெரிந்து கொண்டிருக்கிருன்.

வாழ்க்கையிலே இப்படியெல்லாம் யார் இவனிடம் அக்கறையும், அநுதாபமும் கொள்ளப் போகிருர்கள்? வாழ்க்கை யென்பது உறுதியோடும், தன்னம்பிக்கை யோடும் போராடுபவனுக்கே வெற்றி கொடுக்கும். இவன் பிறரையே எதற்கும் எதிர்பார்த்து நிற்பான். தனக்கு

வேண்டிய தெல்லாம் செய்து கொடுக்கவில்லை என்று அவர்களை நொந்து கொள்ளுவான். அவர்களோடு சரியாகப் பழகமாட்டான். ஆதலால் வாழ்க்கை அவனுக்கு எப்படி இன்ப மளிக்க முடியும்?

ஒரே குழந்தையுடைய பெற்றோர்கள் இதை நன்கு கவனிக்கவேண்டும். குழந்தை என்றும் தங்கள் பாதுகாப்பிலும் அன்பிலுமே இருக்கப் போவதில்லை. அது மற்றவர்கள் மத்தியில் வாழவேண்டும். அதற்கு அதைத் தயார் செய்யவேண்டுமானால் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பிறரிடையே குழந்தை தாராளமாகவும், சுய நம்பிக்கையோடும் பழகவேண்டும். எதற்கெடுத்தாலும் பிறரை எதிர்பார்க்கக் கூடாது என்றும் அது தெரிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். அப்பொழுதுதான் அக் குழந்தை வாழ்க்கையில் வெற்றியடையும்.

# 11. குழந்தையும் பெற்ருேரும்

குழந்தையிடம் அன்பில்லாத தாய் தந்தையர் இருப்பார்களா ?

"இதென்ன கேள்வி? இருக்கமாட்டார்கள் என்பது தான் தெரிந்த விஷயமாயிற்றே!" என்று பொதுவாக எல்லோருடைய மனத்திலும் எண்ணமுண்டாகும். குழந்தையிடம் அன்பு கொள்வதுதான் பெற்ருேரது இயற்கை. 'பெற்ற மனம் பித்து' என்ற பழமொழியும் அதனுலேயே தோன்றி யிருக்கிறது. இந்த அடிப்படையைக் கொண்டே இதுவரை மனத்தத்துவ உண்மைகளை எழுதியிருக்கிறேன்.

ஆனல் மகவிடம் வாஞ்சையில்லாத ஒரு சில பெற்ருேர்கள் இருத்தலும் கூடும். அந்த உண்மையையும் நாம் உணரவேண்டும். லட்சத்தில் ஒருவர் இருக்கலாமோ என்னவோ என்று நினைப்பீர்கள். நான் அப்படிக் கூடத் தைரியமாகக் கணக்கிட முன்வரவில்லை. நான் சொல்வதெல்லாம் இதுதான். அதாவது குழந்தைகளிடம் அன்பு கொள்ளாத பெற்ருேர்களும் இருப்பார்கள் என்பதே. அதன் காரணத்தைச் சுருக்கமாகக் கீழே விளக்கி யிருக்கிறேன்.

அன்பில்லாம லிருப்பதோடு குழந்தையிடம் வெறுப்புணர்ச்சியும் சில பெற்ருேர்களிடம் காணப்படுகிறது. வெறுப்புணர்ச்சி என்ருல் அன்பே சிறிதும் கலவாததென்று யாரும் எண்ணக்கூடாது. மொத்தத்திலே பார்க்கும்போது வெறுப்புணர்ச்சியே மேலிட்டு நிற்கும் நிலையைத்தான் நான் குறிப்பிடுகிறேன். இந்த மாதிரி வெறுப்பு

கு—5

ணர்ச்சி அறியாமையால் ஏற்படலாம். அல்லது தம்மை அறியாமலேயே பெற்றோர்கள் இவ் வெறுப்புணர்ச்சியைக் கொண்டிருக்கலாம்.

இங்ஙனம் உண்டாகும் வெறுப்புணர்ச்சியைப்பற்றி விரிவாக ஆராய்ந்த பிட்ஸ் சைமன் (Fitz Simon) என்பார் அது சாதாரணமாக எவ்வாறெல்லாம் நடத்தையில் வெளியாகிறது என்பதை வகுத்துக் கூறியிருக்கின்றார்.

குழந்தையிடம் குறைபாடுகளையே காணுதல்
கடுமையான தண்டனை கொடுத்தல்
பயமுறுத்துதல்
பூட்டி வைத்தல்
பழித்துப் பேசுதல்
சிறிது நேரங்கூட அன்போடு பேசாதிருத்தல்
இஷ்டம்போல எங்கு வேண்டுமானாலும்
திரியும்படி விட்டுவிடுதல்
மற்றக் குழந்தைகளோடு ஒத்திட்டு இழிவு படுத்துதல்
எதிர்பார்க்க முடியாத செயல்களை எதிர்பார்த்தல்
பேசாது விடுதல்
வீட்டைவிட்டுத் துரத்துதல்

என்று இப்படிப் பலவேறு வகைகளில் அந்த வெறுப்பானது வெளிப்படுகின்றது. இவ்வாறு ஏதாவது ஒரு வகையில் நடந்து கொள்ளும் சில பெற்றோர்கள் தங்கள் நடத்தையில் வெறுப்புணர்ச்சி இருக்கிறதென்றும் அது குழந்தையைப் பாதிக்கிறது என்றும் அறியாமலும் இருக்கலாம்.

வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளிடம் சாதாரணமாகக் கீழ்க் கண்ட தன்மைகள் காணப்படுகின்றன.

பிறரிடம் சண்டையிடுதல்
கலகம் உண்டாக்குதல்
விரோதம் கொள்ளுதல்
பொறாமை கொள்ளுதல்
பிறருக்குத் துன்பம் விளைத்தல்
தன்னைப் பிறர் கவனிக்கும்படியாகக் குறும்பு செய்தல்

இவற்றோடு திருடவும் பொய் சொல்லவும் அக் குழந்தைகள் பழகிக் கொள்கின்றன. சில குழந்தைகள் வீட்டைவிட்டு ஓடி விடுவதும் உண்டு. இம்மாதிரி செய்கைகளால் பெற்றோரின் மன அமைதியைக் குலைக்க வேண்டுமென்று தம்மை அறியாமலேயே அக் குழந்தைகளுக்கு ஆசை ஏற்படுகின்றது.

நல்ல முறையில் குழந்தை வளர வேண்டுமாயின் அதை அன்புடன் பேணவேண்டும். அன்பில் மலர்கின்ற குழந்தை எவ்விதமான மனக் கோளாறு மில்லாமல் வளர்கின்றது. மித மிஞ்சிய அன்பினாலும் தீங்கு நேர்வதுண்டு. ஆனால் அதைவிட வெறுப்புணர்ச்சியின் விளைவாக உண்டாகும் தீமைகளே அதிகம். அன்பு சற்று அதிகமாகவே இருக்கலாம்; ஆனால் வெறுப்புணர்ச்சி கூடவே கூடாது.

சற்று நிதானமாக யோசித்துப் பார்த்தால் அன்பு மிகுந்த பெற்றோரிடத்திலும் சில சமயங்களிலே இந்த வெறுப்புணர்ச்சியின் சாயல் ஒரு விநாடியாவது படிவதுண்டென்பதை நாம் அறியலாம். நீடித்து நிற்கும் வெறுப் பல்ல; ஆனால் குழந்தையால் ஏற்படும் தொந்தரவுகளினால் ஏற்பட்ட மின்னலாய்த் தோன்றி மறையும் வெகுளி உணர்ச்சி. அதைத் தவிர்ப்பதென்பது யாருக்கும் முடியாத காரிய மென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. தாய்க்கு ஒரு சமயம் இது சாத்தியமாகலாம். தாய்மை எய்திய பெண்களிடத்திலே ஒரு அபார சக்தி இருக்கின்றது. அது

மிக ஆச்சரியமானது. அதனால் அவர்களால் அது முடியு மென்றாலும் நான் இதுவரை குழந்தையிடம் சில வேளைகளி லாவது கோபத்தைக் காட்டாத தாயைப் பார்த்ததில்லை. கையால் ஒரு சின்ன அடிபோட்டு விட்டு அக்கணத்திலேயே குழந்தையை அணைத்துக் கொள்ளும் தாயையும், லேசான சுடுசொல் ஒன்றை உச்சரித்துவிட்டு அடுத்த கணத்திலே அன்பு பொழியும் தாயையும் நான் குறிப்பிடவில்லை. வெறுப்புணர்ச்சி என்ற அலையே தோன்றாத உள்ள முடைய தாயைத்தான் நான் கண்டதில்லை என்று சொல்லு கிறேன்.

இம்மாதிரி வெகு அரிதாகத் தோன்றும் வெறுப்பு ணர்ச்சியால் குழந்தையின் உள்ள வளர்ச்சிக்குப் பெரிய தொரு தீங்கு ஏற்பட்டுவிடாது. சில சமயங்களிலே அந்தச் சிறு வெறுப்புணர்ச்சியே நன்மை பயப்பதாகவும் இருக் கும். தாய் ஏதாவதொரு செயலைக்கண்டு வெறுப்படைகிறாள் என்றால் குழந்தை அதை விட்டுவிட முயலும். அவ்வகை யில் அது நன்மையாகவே முடிகின்றது. மேலும் எப்பொழு தாவது லேசாக உண்டாகும் வெறுப்புணர்ச்சியானது குழந்தையின் உள்ளத்தில் ஆழ்ந்து பதியாதவாறு பெற் றோரின் இயல்பான அன்பு அதைத் துடைத்து விடுகின்றது. ஆதலால் அவ்வித வெறுப்புணர்ச்சியைப் பற்றிக் கவலைப் படவேண்டியதில்லை.

ஆனால் யாரிடமாவது இவ் வெறுப்புணர்ச்சி சற்று மிகுந்து காணப்படுமானால் அதனால் குழந்தைக்குத் தீங்கு விளைகின்றது என்பது நிச்சயம். ஆகவே அதுபற்றி அனை வரும் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

குழந்தையிடம் வெறுப்புணர்ச்சி உண்டாவதற்குப் பல காரணங்கள் உண்டு. போதுமான ஓய்வு கிடைக்காமல் செய்யும்படியான அதிக உழைப்பும் பலஹீனமும் பொறு

மையைச் சீக்கிரம் இழக்கும்படி செய்துவிடுகின்றன. சம்ரட்சணை செய்ய இயலாத நிலையில் பல குழந்தைகள் பிறப்பது வெறுப்புணர்ச்சிக்கு ஒரு காரணமாகிறது. இப்படிப்பட்ட வெளிப்படையான காரணங்கள் அநேகம் உண்டு. இவற்றோடு மறை உள்ளத்திலிருந்து மறைமுகமாக வேலை செய்யும் காரணங்கள் உண்டு. ஆவலோடு எதிர்பார்த்திருந்தபடி ஒரு குழந்தை அழகாக இராது; அல்லது அதி தீட்சண்ணியம் காண்பிக்காது. தாய்க்குத் தன் கல்யாண விஷயத்திலேயே திருப்தி ஏற்பட்டிருக்காது. இவைபோன்ற காரணங்கள் எல்லாம் பெற்றோருக்கே தெரியாதபடி மறைவாக அவர்கள் உள்ளத்தின் ஆழத்தில் அழுந்திக் கிடந்து கொண்டு வெறுப்புணர்ச்சியை மேலே கிளப்புகின்றன. இவற்றின் உண்மைகளை அறிந்து கொள்வதால் கூடுமானவரை இவற்றைச் களைய நாம் முயற்சி செய்யலாம்.

# 12. அறிவிலே ஆசை

தஞ்சாவூர்ப் பெரிய கோயிலிலே ஓர் அற்புதமான கோபுரம் இருக்கிறது. மிகப் பெரிய கோபுரம். ஆனால் அந்த ஒரு கையகலக் காகிதத்திலே போட்டோ எடுத்துவிடலாம். அந்தக் கோபுரத்தின் பெரிய வடிவைச் சிறிய அளவில் அந்தப் போட்டோ காண்பிக்கும். இதைப்போலக் குழந்தையையும் வயது முதிர்ந்த ஒரு மனிதனுடைய சிறிய போட்டோ என்று நினைப்பது முற்றிலும் சரியல்ல. குழந்தையிலிருந்துதான் மனிதன் உருவாகிறான். அந்தக் குழந்தைப் பருவத்திலேயே முழு மனிதனுடைய பல தன்மைகள் விதை போன்ற நிலையிலே மறைந்து நிற்கின்றன. அப்படி யிருந்தாலும் வயது முதிர்ந்தவனிடம் நாம் எதிர்பார்க்கும் நடத்தை முதலியவைகளைக் குழந்தைகளிடம் எதிர்பார்க்கக்கூடாது. குழந்தையின் உலகமே வேறு. அதன் எண்ணங்களும், கற்பனைகளும் பலவகைகளிலே தனிப்பட்டவை.

பெரிய சத்தத்தைக் கேட்டால் குழந்தை பயப்படுகிறது என்று சொன்னோம். இந்தப் பயம் பிறவியிலேயே அதற்கு இயல்பாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். இதைப்போல இயல்பாக அமைந்துள்ளவற்றிற்கு இயல்பூக்கம் என்று பெயர். மனிதனிடத்திலே பல இயல்பூக்கங்கள் இருக்கின்றன. அவற்றிலே சில குழந்தைப் பருத்திலே மிகச் சிறப்பாக வெளித் தோன்றும். எதையும் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையை மூட்டும் ஒரு இயல்பூக்கமும் இருக்கின்றது. அதற்கு விடுப்பு (Curiosity) என்று பெயர். குழந்தைப் பருவத்திலே இந்த இயல்பூக்கம் மிகத் தீவிரமாக இருக்கும்.

குழந்தைக்கு இந்த உலகமே புதியது. இதிலுள்ள பல பொருள்களும், காட்சிகளும் அதற்கு ஒரே புதுமை. அவற்றைப் பற்றியெல்லாம் அறிந்துகொள்ள வேண்டுமென்று குழந்தை ஆசைப்படுகிறது. சின்னக் குழந்தை ஒரு பொருளைக் கண்டவுடன் அதைத் தொட்டுப் பார்க்க, கையிலே பிடித்துப் பார்க்க விரும்புகிறது; அதன் பிறகு அதை வாயிலே கடித்துப் பார்க்க விரும்புகிறது. பேசக் கூடிய சக்தி கொஞ்சம் வந்தவுடன் ஏதாவதொன்றைப் பற்றிச் சதா கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கிறது. இவையெல்லாம் அந்த விடுப்பு என்ற இயல்பூக்கத்தினால் ஏற்படுவன.

இந்த இயல்பூக்கம் வயதாக ஆகச் சற்று மழுங்கிப் போய்விடுகிறது. ஒன்றைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆத்திரம் வயதேற ஏறக் குறைந்துபோய் விடுகிறது. குழந்தையிடத்திலே நன்றாக மேலோங்கி யிருக்கும் இந்த இயல்பூக்கத்தை நாம் போற்றவேண்டும். இதன்மூலம் குழந்தை அறிவு பெறுகின்றது. அதைத் தடைப்படுத்துவது குழந்தையின் அறிவு வளர்ச்சியைத் தடைப்படுத்துவதாகும்.

குழந்தை ஓடிவருகிறது: "அம்மா, ஏன் மழை பேயறது? அது எங்கிருந்து வர்ரது?" என்று கேட்கிறது. "சூரியனை ராத்திரியிலே காணமே? அது எங்கே போகுது?" என்று இப்படி ஏதாவது கேட்டுக்கொண்டே இருக்கிறது. அதற்குப் பதில் சொன்னால் இன்னும் எத்தனையோ கேள்விகளைக் கேட்கிறது.

பல சமயங்களிலே நமக்குச் சலிப்புத் தட்டிப்போகும். பல சமயங்களிலே நம்மால் பதில் சொல்லவே முடியாது. அதனால் நாம் பொறுமை யிழந்து குழந்தையின் இந்த இயல்பூக்கத்தை மழுங்கச் செய்துவிடக் கூடாது. குழந்

தைக்குப் புரியும்படி விஷயங்களை விளக்கவேண்டும். தெரியாதனவற்றைத் தெரிந்து சொல்ல வேண்டும்.

விடுப்பு இயல்பூக்கம் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. அதை நாம் போற்றவேண்டும்.

இந்த இயல்பூக்கத்தைப் போலவே குழந்தையின் வளர்ச்சிக்கு உதவும் வேருெரு இயல்பூக்கத்தைப் பற்றியும் இந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். போகிற வழியிலே ஏதாவது ஒரு கூட்டமிருக்கும். பலபேர் ஆவலோடு அங்கு சென்று பார்ப்பார்கள். வழியில் வருகிற ஒவ்வொருவர் உள்ளத்திலும் மற்றவர்களைப் போலத் தாமும் போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆசையுண்டாகும். அவர்களைப் பின்பற்றி இவனும் அந்தக் கூட்டத்தைப் போய்ப் பார்ப்பான். இவ்வாறு பிறரைப் பார்த்துச் செய்யும் இயல்பூக்கத்திற்கு அனுகரணம் என்று பெயர்.

அனுகரணம் முக்கியமாக இரண்டு வகைகளில் நடைபெறும். மற்றவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே நடந்துகொள்ள வேண்டும் அல்லது பேசவேண்டும் அல்லது பாடவேண்டும் என்றிவ்வாறு மனத்திற் கொண்டு அறிந்தே செய்வது ஒருவகை; தன்னை யறியாமலேயே பிறரைப் போலச் செய்வது மற்ருெரு வகை. குழந்தையிடத்திலே இந்த இருவகையான அனுகரணமும் நன்கு காணப்படுகின்றன. குழந்தை தன்னுடன் பழகுபவர்களைப்போல, முக்கியமாகத் தாய் தந்தையர்களைப்போலப் பல வகைகளில் அறிந்தும் அறியாமலும் பின்பற்றி நடக்கின்றது. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என்பது பழமொழி. சொன்னதைச் சொல்லுவதோடு செய்ததையும் செய்யும் குழந்தை. ஒருவர் பாடுவதையோ, நடிப்பதையோ குழந்தை வெகு சுலபமாகக் கற்றுக் கொள்ளுகிறது; கற்றுக்கொண்டு அவரைப் போலவே பாடி அல்லது நடித்துக் காண்பிக்க முயல்கிறது.

குழந்தைக்கு நல்ல பழக்கங்களையும், அறிவையும் உண்டாக்க இந்த இயல்பூக்கம் பெரிதும் உதவியாக இருக்கிறது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் இதை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பெற்றோர்களைப் பார்த்துப் பல காரியங்களை அவர்களைப்போலவே குழந்தை செய்ய முயல்கிறதென்பதிலிருந்து மற்றொரு விஷயமும் புலனாகின்றது. பெற்றோருடைய பேச்சு, நடத்தை எல்லாம் குழந்தைக்கு முன்மாதிரியாக இருக்கின்றனவாதலால் அவற்றிலெல்லாம் அவர்கள் மிக எச்சரிக்கையோடிருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. குழந்தையை நன்கு வளர்க்க ஆவல் கொண்டிருக்கும் பெற்றோர்கள் தங்கள் நடத்தையையே, ஏன் வாழ்க்கையையே அதற்கேற்றபடி அமைத்துக் கொள்ள வேண்டும். களைய முடியாத குறைபாடுகளைக் குறைந்த பட்சம் குழந்தைக்குத் தெரியாதவாறுவது மறைத்துக் கொள்ளவேண்டும்.

# 13 சூழ்நிலை

பாரம்பரியமாகக் குழந்தைக்கு அமையும் தன்மைகள், திறமைகள் முதலியவற்றைப்பற்றி முன்பே சுருக்கமாகக் கூறினேன். தாயும் தந்தையும் எவ்வாறு அவற்றிற்கு உதவுகிறார்கள் என்பதையும் கண்டோம். ஆனால் அவை யெல்லாம் வளர்ந்தோங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை வேண்டும். இல்லாவிட்டால் அவை நசித்துப் போகும்; அல்லது முழு வளர்ச்சி பெறாமல் நின்றுவிடும். ஆதலால் சூழ்நிலையைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

சூழ்நிலை என்ற சொல்லால் எதைக் குறிப்பிடுகிறோம் என்பதை முதலில் தீர்மானம் செய்துகொள்ளுவது அவசியம். சூழ்நிலை என்கிறபோது மனத் தத்துவர்கள் சுற்றியிருக்கும் இடம், சுற்றி யிருக்கும் மக்கள் ஆகியவற்றை மட்டும் குறிப்பிடுவதில்லை. அவர்கள் அச் சொல்லுக்கு மிக விரிவான பொருள் கூறுகிறார்கள். பாரம்பரியத்தால் அமையாத மற்ற எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் அநுபவங்களையும், தொடர்புகளையும், நிகழ்ச்சிகளையும் சூழ்நிலை என்ற சொல்லாலேயே அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சில மனத்தத்துவர்கள் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவ்வாறு பாரம்பரியமாக எவ்விதமான திறமையும் அமைவதில்லை என்றுகூடச் சிலர் துணிந்து கூற முன்வருகிறார்கள். அவர்கள் கூறுவது முற்றிலும் உண்மையல்ல என்றாலும் அவர்கள் அவ்வாறு கூறுவதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு.

ஒரு குழந்தைக்குக் கலைத் திறமை அமைந்திருக்கிற தென்று வைத்துக் கொள்ளுவோம். அது ஒரு சிறந்த ஓவிய னுகலாம்; அதற்கேற்ற திறமைகள் பாரம்பரியமாகக் கிடைத்திருக்கிறதென்று வைத்துக் கொண்டாலும் அத் திறமையைப் பயிற்சியால் வளர்க்காவிட்டால் அது ஓங்கிப் பிரகாசிக்குமா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஓவியக் கலைக்கு வேண்டிய திறமை முழுவதும் இருக்கிற தென்றால் அக் குழந்தைக்கு அதன் வாழ்க்கையில் தூரிகை பிடிக்கவோ வர்ணத்தைக் குழைத்துத் தீட்டவோ சந்தர்ப் பமே வாய்க்காவிட்டால் அது ஒரு சிறந்த ஓவியனுக முடியுமா? முடியவே முடியாது.

சில குழந்தைகள் ஆச்சரியமாகப் பாடுகின்றன. கிரா மப் பக்கங்களிலே போகும்போது அழகாகப் பாடுகின்ற ஒரு சில இடைப் பையன்களைப் பார்க்கிறோம். அவர்கள் பாடுகின்ற தெம்மாங்கும் நாடோடிப் பாடலும் நம் உள் ளத்தைக் கவர்கின்றன. ஆனால் அந்த அளவிலேயே அந்தப் பாட்டுத் திறமை நின்றுபோய் விடுகிறது. வயதாக ஆக மறைந்தும் போய்விடுகிறது. ஏனென்றால் அந்தத் திறமை நன்கு மலர்ச்சியடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கிடைப் பதில்லை. சூழ்நிலை அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அத்திறமை வளரமுடியும். ஆதலால் தான் சில மனத் தத்துவர்கள் பாரம்பரியத்தை முக்கியமான தென்று ஏற்றுக்கொள்ளாமல் சூழ்நிலையையே வற்புறுத்து கிறார்கள்.

பாரம்பரியத்தால் பல திறமைகள் அமைகின்றன என்று கூறுவதிலும் ஒரு முக்கியமான விஷயத்தை நாம் மனத்திற் கொள்ளவேண்டும். பாரம்பரியம் ஒரு திறமையை முழுமையாக அப்படியே ஒருவனுக்குக் கொடுத்து விடுவதில்லை. ஒருவனுக்கு ஆயிரம் ரூபாயைப் பையில் போட்டுக் கட்டிக் கொடுப்பதுபோலப் பாரம்பரியம்

ஒரு திறமையைக் கட்டிக் கொடுப்பதில்லை. பணப்பையைப் பெற்றவன் அதற்காக முயன்றிருந்தாலும் சரி அல்லது முயற்சியே செய்யாமலிருந்தாலும்சரி அவனுக்கு அத் தொகை முழுவதும் கைக்கு வந்து விடுகிறது. பாரம்பரியம் அவ்வாறு திறமையைக் கட்டிக் கொடுப்பதில்லை. ஒரு திறமையை அல்லது கலையை அல்லது வித்தையை ஒருவன் பெறுவதற்கு வேண்டிய மன இயல்பைத்தான் பாரம்பரியம் கொடுக்கும். சரியான சூழ்நிலை ஏற்பட்டால் அந்த மன இயல்பின் உதவியால் திறமைகள் மலர்ச்சியடையும். இல்லாவிட்டால் ஓரளவு வெளிப்பட்டும் வெளிப் படாமலுங்கூட அவை மறைந்துபோகும். ஆகையால் பாரம் பரியத்தால் கிடைத்தவையெல்லாம் சூழ்நிலையாலேதான் வளர வேண்டும் என்பதும், ஒருவனுடைய வாழ்க்கையை நிர்மாணிப்பதில் சூழ்நிலை பெரியதோர் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது என்பதும் தெளிவாகின்றன.

திறமைகள் மலர்வதில் சூழ்நிலை இவ்வாறு முக்கியத் துவம் பெற்றிருப்பதை அறிந்த சில மனத் தத்துவர்கள் பாரம்பரியம் என ஒன்று இல்லை என்றுகூடச் சொல்ல முன் வருகிறார்கள் என்று முன்பே குறிப்பிட்டேன். எந்தத் திறமையை வேண்டுமானாலும் அதற்கு வேண்டிய சூழ் நிலையை ஏற்படுத்திப் பயிற்சியால் எய்திவிடலாம் என்பது அவர்களுடைய கொள்கை. இது ஓரளவிற்குச் சாத்திய மாகலாம். ஓவியத்திறமையே இல்லாத ஒருவன் பயிற்சி யால் அக்கலையில் ஓரளவு முன்னேற்றமடையலாம். ஆனால் அதில் முழுவெற்றி பெறமுடியாது. இடைவிடாது பயின்று ஒரு சாதாரண சித்திரக்காரன் ஆகலாம். அவனுடைய ஓவியத்திலே அமரத்துவம் பெறக்கூடிய அம்சமோ பிறர் உள்ளத்தைப் பெரிதும் கவரக்கூடிய அம்சமோ இருக் காது. இதே போலத்தான் மற்றத் திறமைகளிலும்.

இவ்வாறு கூறுவதால் சூழ்நிலையின் முக்கியத்துவம் குன்றிப் போய் விடுவதில்லை. பாரம்பரியம் விதை என்றால்

சூழ்நிலைதான் அதை மரமாக்க வேண்டும். பாறையின் மேலே போட்ட விதை பயனற்றுப் போய்விடுகிறது. விதை முளையாகி இளங்கன்றாகிப் பெரிய மரமாவதற்கு நல்ல மண் வேண்டும்; தண்ணீர் வேண்டும்; நல்ல உரம் வேண்டும். முளையிலேயே அழிந்து போகாதபடி பாதுகாப்பு வேண்டும். இவையெல்லாம் போன்றதுதான் சூழ்நிலை.

குழந்தையின் இயல்பான நல்ல திறமைகள் நன்கு வளர்வதற்கு வேண்டிய சூழ்நிலையைப் பெற்றோர் அமைத்துக் கொடுக்கவேண்டும். பெற்றோருக்கு ஏதாவது ஒரு துறையிலே குழந்தை பெருமை அடையவேண்டும் என்ற ஆவலிருக்கலாம். ஆனால் குழந்தையின் இயல்பைக் கவனியாமல் அதையே வற்புறுத்துவது சரியல்ல. அதனால் குழந்தையின் இயல்புத் திறமை மழுங்கிப் போவதோடு பெற்றோர்கள் தங்கள் ஆசையிலும் நல்ல வெற்றி காணுமல் ஏமாற்றமடைய நேரிடும்.

# 14. வளர்ச்சி

மிகச் சிறிய அண்டம் விந்தணுப்பாய்ந்து பூரிக்கின்றது; அதுவே குழந்தையின் வாழ்க்கைத் தொடக்கம் என்று கண்டோம். அண்டம் பூரித்தது முதல் அதன் வளர்ச்சி இடைவிடாது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. கருவிலே இருக்கும்போது குழந்தையின் உடல் உறுப்புக்கள் மட்டும் வளர்ச்சியடைவதில்லை. அதன் உள்ளமும் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. தாயின் உணர்ச்சிகளும் அநுபவங்களுங்கூட அந்தக் கருவின் உள்ளத்தைத் தொடுகின்றன என்றுகூட எண்ணவேண்டியிருக்கிறது. இதை ஒருவாறு உணர்ந்துதான் கருப்பமடைந்த பெண்களை எப்பொழுதும் சந்தோஷமாகவும் அமைதியான சூழ்நிலையிலும் உயர்ந்த எண்ணங்களும் லட்சியங்களும் கொண்டிருக்கும்படியாகவும் வைத்திருக்கவேண்டும் என்று நம் நாட்டில் வெகுகாலமாக அபிப்பிராயம் இருந்து வருகிறது. கவலையால் வாடும்படியான தாயின் பாலைக் குடிப்பதால் அது குழந்தையின் மன அமைதியைப் பாதிக்கின்றது என்று ஆராய்ச்சியால் கண்டிருக்கிறார்கள். அதைப் போலவே கருவிலிருக்கும் குழந்தையின் மனத்தையும் தாயின் உணர்ச்சிகள் பாதிக்கும் என ஊகிக்கலாம்.

பிறந்தவுடன் குழந்தையைப் பார்த்தால் அது ஒரு விதத்திலும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் சக்தியற்றதாகக் காணப்படுகிறது. இருந்தாலும் அது பசி வந்தால் அதைத் தெரிவிக்க அழுகிறது. ஏதாவது தொந்தரவு ஏற்பட்டாலும் அழுகிறது. தனது உணர்ச்சிகளைத் தெரிவிக்க அப்பொழுது அதற்கு அழுகை ஒன்றுதான் பாஷையாக

இருக்கிறது. இருந்தாலும் அதற்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணக்கூடாது.

குழந்தையின் உள்ளம் வெகு விரைவிலே வேலை செய்யத் தொடங்குகிறது. அது வெகு நுட்பமானது. அது உணர்ச்சிகளையெல்லாம் நன்கு பதிவுசெய்துகொள்ளுகிறது. இரண்டாவதாகக் குழந்தையின் உள்ளத்திலே இயல்பூக்கங்கள் மேலெழுந்து நிற்கின்றன. அவற்றையெல்லாம் அடக்கியாளச் சிறிது சிறிதாகவே குழந்தை கற்றுக் கொள்ளுகிறது. மூன்றாவதாகக் குழந்தையுள்ளம் மிகுந்த கற்பனைசக்தி வாய்ந்தது. குழந்தைக்குக் கிடைத்துள்ள இந்தச் சக்தி மிகவும் ஆச்சரியமானது.

இவற்றையெல்லாம் நன்கு மனத்தில் வைத்துக் கொண்டோமானால் குழந்தை வளர்ப்பிலே நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பது தெரியும். குழந்தையின் உள்ளத்தில் பதிவாகும் அநுபவங்களையும் உணர்ச்சிகளையும் மாற்றுவது எளிதல்ல. ஆதலால் அதில் எப்படிப்பட்ட உணர்ச்சிகள் பதிவாகவேண்டும் என்பதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இயல்பூக்கங்களில் விரும்பத்தகாதனவற்றை அடியோடு களைந்து விடுவதென்பது முடியாத காரியம். ஆனால் அவற்றை நல்ல வழிகளிலே செல்லுமாறு மாற்றிவிடலாம். குழந்தையின் கற்பனைசக்தியின்வலிமையை அதன் விளையாட்டிலும், சித்திரங்களிலும், செய்கைகளிலும் காணலாம். அவற்றைக் குழந்தையின் அறியாமையால் விளைந்தவை என்று அலட்சியம் செய்தால் அதன் கற்பனைத்திறன் குன்றிப்போய்விடும். குழந்தையின் கற்பனை உலகம் வேறு; வயது வந்த நாம் காணும் உலகம் வேறு; அதனால் நமது கற்பனை உலகமும் வேறே. நமது அநுபவத்தையும் உணர்ச்சியையும் அளவைகளாகக் கொண்டு குழந்தையின் கற்பனையை அளவிடக் கூடாது. குழந்தைப்பருவத்திலே நாம் கொண்டிருந்த கற்பனையும்

அப்போதைய நமது நடத்தையும் மறந்து போய் விடுவதால இப்பொழுது நம்மால் குழந்தையின் செய்கைகளை அறிந்து கொள்வது கடினமாக இருக்கிறது.

அநுதாபத்தோடும் அன்போடும் பொறுமையோடும் குழந்தையை அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு மனத் தத்துவர்கள் ஆராய்ந்து கூறியுள்ள பல உண்மைகள் பெருந்துணையாக நிற்கும். அவ்வாறு குழந்தையை அறிந்து கொண்டு வளர்த்தால் அதன் திறமைகளெல்லாம் நன்கு வளர்ந்து பிரகாசிக்க நாம் பெரிதும் உதவி செய்ய முடியும்.

குழந்தை நமது பெரிய செல்வம். அது நன்கு மலர்ந்து உலகில் புகழ்பெற்று வாழ எல்லா வகைகளிலும் உதவ வேண்டுவது நமது கடமை. அதுவே நமக்குப் பெரியதோர் இன்பந் தருவதுமாகும்.

**குறிப்பு:**—குழந்தை உள்ளத்தைப் பற்றியும் குழந்தை வளர்ப்பைப் பற்றியும் சுருக்கமாக இங்கு எழுதியுள்ளேன். எல்லா அம்சங்களைப் பற்றியும் இச்சிறு நூலில் எழுதுவதென்பது முடியாது. குழந்தை உள்ளம் என்ற தலைப்புடன் முன்பே ஒரு நூல் வெளியிட்டிருக்கிறேன். அதற்குத் துணை நூலாகவே இதை எழுதுகிறேன். அந்நூலையும் சேர்த்துப் படித்தால் பெரிதும் பயனடையலாகும்.